1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS" JAFFNA.

Telephone: NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

78-ம் புத்தகம் 28-ம் இல. யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு ஆடிமாதம் 23-ந்திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10



## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

மழைக்கோலம் இடையிடையே காணப்படினும் மழைபெய்வதாயில்லை. காற்றின்வேகம் சற்றே தணிந்திருக்கிறது. நகரிலே அவசியந்தேவைப்படும் பகுதிகளுக்கு நகரசபை லொறி மூலம் நல்லகுடிதண்ணீர் உதவிவருவது பாராட்டத்தக்கதே.

### நிலாவரையும். நீர்ப்பாய்ச்சலும்

நவக்கிரியிலுள்ள நிலாவரை வற்றாஊற்றுக்கிணற்றினது அருகாமையிலே பயிர்ச்செய்கைக்கு ஏற்றதான சுமார் இருநூறுஏக்கர் நிலத்தைச் சமீபத்திலே நீர்ப்பாய்ச்சுவதற்கென உபயோகிக்கப்படவிருக்கிறது. இதற்குவேண்டிய யந்திரசாதனங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. அக்கிணற்றிலிருந்து ஒருஏக்கர்நிலத்தை வருடம்ஒன்றுக்கு நீர்ப்பாய்ச்சுதற்கு 43 ரூபா அறவிடவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள கமக்காரர் இந்தச் சலார்வீதத்தைச் சந்தோஷமாகஏற்றுத் தங்களுக்கு அருளப்பட்டுள்ள நீர்ப்பாசனவசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதாகத் தெரிவித்திருக்கின்றார்கள். கொங்கிறீற்கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் பெரியவாய்க்கால் பழையடச்சுக்காரத் தெருவின் பக்கமாகத் தென்முகமாய் ஒருமைலுக்கு மேற்பட்ட தூரம்வரையிலே செல்லுகின்றது. பின்னர் அங்கிருந்து இருகிளை வாய்க்கால்கள் கிழக்குப்பக்கமாகவுள்ள நிலத்தைநோக்கிச் செல்லுகின்றன. 1896-ம் ஆண்டுமுதல் ஆலோசிக்கப்பட்டுவந்த நிலாவரைக்கிணற்று நீர்ப்பாய்ச்சற்றிட்டம் இப்போதுதான் பூர்த்தியடைந்திருக்கிறது.

### மகாராணியாரின் விஜயம்

எலிசபேத்மகாராணியார் தமது நாயகரான எடின்பேர்க்கின் டியூக் கோமகனுர்சமேதராய் அடுத்தவருடம் சித்திரைமாதம் 15-ந் திகதிமுதல் 18-ந் திகதிவரையிலே நான்கு தினங்கள் நுவரெலியில் தங்கவிருக்கின்றார். அதனால் நுவரெலிமேயர் இருவரையும் தக்கவாறு வரவேற்பதற்கான அடுக்குகளைச்செய்ய ஆயத்தப்படுகின்றார்.

### ஆஸ்திரேலிய மாவின்விலை

மாவின்விலையைக் குறைத்துத்தரவேண்டுமென்று நமது அரசாங்கம் ஆஸ்திரேலியாவைக் கேட்டுக்கொண்டதின்பேரிலே, ஆஸ்திரேலிய மந்திரிசபை அதன்விலையைத் தொன் ஒன்றுக்கு 1 பவுண் 10 சிலிங்வீதம் குறைத்துவிடத் தீர்மானித்திருப்பதாய் அறிவித்திருக்கின்றது. அதனால் நமதுஅரசாங்கம் மாவுக்கு உதவிமான்யமாக வழங்கும்பணம் பலலட்சம் ரூபாவால் குறைந்துவிடும். என்றாலும் அரசாங்கம் இன்னும் அதிகம்மலிவாக மாகிடைக்கக்கூடிய நாடுகளைத் தேடி ஆராய்ந்துவருகின்றது. ஏற்கனவே ருஷியா, ஒல்லாந்து, மேற்குஜேர்மனி, ஆர்ஜென்றீனு ஆகியநாடுகள் மாஉதவ முன்வந்திருக்கின்றன. தற்போது அரசாங்கம் தருவிக்கும்மாவைக் கொள்வனவிலே நூற்றுக்குஒன்றுக்கு 8 சதவீதம் குறைத்துவிற்பதால் மூன்றுகோடிரூபா நட்டம்அடைகின்றது.

### வெங்காயத்தின் தரம்

யாழ்ப்பாணத்திலே இம்முறை ஏராளமான வெங்காயம் விளையுமென்பதை எதிர்நோக்கி, அதனைத் தரம்பிரிக்கும் திட்டம்ஒன்றை உணவு-கமத்தொழிற்பகுதி நடைமுறைக்குக் கொண்டுவரவிருக்கிறது. அதாவது வேறுவேறான விலையுள்ள இருதரமாக அது பிரிக்கப்படவிருக்கிறது.

### தேர்தல்விசாரணை மனு

பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபைக்கு மட்டக்களப்புப் பிரதிநிதியாகத் தெரியப்பெற்றிருந்த திரு. ஆர். பி. கதிர்காமர் அவர்களின்தேர்தல் முறைகேடானதென ஆட்சேபித்துத் திரு. மீராலெவ்வை மகமதுகஸிம் என்பவர் சுப்பிறீங் கோட்டுக்குச் சமர்ப்பித்திருந்தமனு சங். எச். ஏ. டி சில்வா நீதியரசரால் 39 தினங்களாக விசாரணை செய்து சென்றவெள்ளிக்கிழமை தள்ளப்படலாயிற்று. அத்துடன் மனு சமர்ப்பித்தவர் செலவுபணமாகத் திரு. ஆர். பி. கதிர்காமர் அவர்களுக்கு 20,000 ரூபா கொடுக்கவேண்டுமென்றும் தீர்ப்பாயிற்று.

### அர்ச். அந்தோனியார் திருநாள் பெரியகட்டு

இத்திருநாள் வருகிற ஆவணிமாதம் 2-ந் திகதி கொண்டாடப்படும். இம்மாதம் 30-ந் திகதிதொடக்கம் ஆராதனைகள் நடைபெறும். கோவில் அருகாமையில் ஆடி 30-ந் திகதி தொடக்கம் ஆவணி 3-ந் திகதிமட்டும் றெயின்வண்டிகள் நிறுத்தப்படும்.

### எயர்சிலோன் பிரயாணம்

எயர்சிலோன்விமானச் சர்வதேச பிரயாணசேவை நிறுத்தப்படவிருப்பதையிட்டு, முன்னர்இதுவரை ஆகாயவிமானத்தில் பிரயாணஞ்செய்யவேண்டியிருந்த அரசாங்கஉத்தியோகஸ்தர்கள் இனிமேல் கடல்மார்க்கமாகப் பிரயாணஞ்செய்ய வேண்டியோராவார்கள். லண்டனிலிருந்து எயர்சிலோன்விமானத்தின் கடைசிப்பிரயாணம் இம்மாதம் 25-ந் திகதியும், கொழும்பிலிருந்து அதன் கடைசிப் பிரயாணம் இம்மாதம் 22-ந் திகதியுமாகும்.

### தெரு விபத்துகள்

இலங்கையிலே சென்ற சித்திரை, வைகாசி, ஆனியாகிய மூன்றுமாதங்களிலும் முந்திய தை, மாசி, பங்குனி மாதங்களைவிட அதிகமான தெருவிபத்துகள்உண்டாய், அநேகமானோர் இறந்தும், காயமடைந்தும் இருக்கின்றார்கள். சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் நிகழ்ந்த 3,480 விபத்துகளில் 77 பேர் இறக்க, ஏனையோர் காயமடைந்தனர். அம்மூன்றுமாதங்களிலும் வடமாகாணத்தில் ஏற்பட்ட விபத்துகள் 106.

## பேறியாவின் வீழ்ச்சி

சோவியற் ருஷியாவின் எதேச்சாதிகார சரித்திரத்திலே எவருடைய பெயரைச்கேட்டால் சனங்கள் பயப்பிராந்திகொண்டு நடுங்குவார்களோ—எவர் பிரமாதமான செல்வாக்குடன் நடந்துகொண்டிருந்தாரோ, அந்தப் பெரியார் பேறியா இன்றுசிறையிலே தள்ளுண்டுகிடக்கிறார். எவர் ஆயிரக்கணக்கானவர்களைச் சிறையில் தள்ளினாரோ அவரே இன்று சிறைவாசஞ்செய்ய நேர்ந்திருக்கிறது. மலெங்கொவ் ஆட்சியானது இவர்பேரில் சாட்டியுள்ளகுற்றம்யாது? இவர் அயல்நாட்டாரின் உள்ளாளாகஇருந்து சோவியற் அரசாங்கத்தையே கவிழ்க்க முயற்சித்தார் என்பதுவே.

பேறியாவுக்குமுன் இதேமாதிரியான கதிக்கு ஆளானவர்கள் எத்தனையோ பேர். யகோடா இருந்தார். யெசாவ் இருந்தார். இன்னும் எவ்வளவோ இரகசியப் பொலிஸ்தலைகள்இருந்தனர். இவர்களின் பெயர்களைக் கேட்டமாத்திரத்தில் பயங்கரச்செயல்கள் ஞாபகத்துக்குவருகின்றன. இப்போது அவர்கள் எல்லாரும் போனவழியில் போவதற்கே பேறியா நிற்கிறார்.

பேறியாதான் மலெங்கோவின்ஆட்சியிலே உள்நாட்டுமந்திரிபதவி வகித்துவந்தார். இவர் சோவியற்அரசின் அந்தரங்கமான இரகசியப்படைகளைக் கட்டுப்படுத்திவந்தார். இந்தப்படை பிரமாண்டமானது. அத்தோடு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சதிவேலைகளையும் இவர்தான் திட்டஞ்செய்துவந்தார். அணுச்சக்தி வேலைகளும் இவர்பொறுப்பில்தான் நடந்தனஎன்று சொல்லப்படுகிறது. இவரது செல்வாக்கு சோவியற் சாம்பிராச்சியத்திலே எல்லாத்துறைகளிலும் நிறைந்திருந்தது. அதனால் சமீபகாலங்களில் மஸ்கோ இழைத்த குற்றங்கள் யாவற்றினதும் பொறுப்பு இவர்மீது சாட்டப்படும். அதாவது, பேறியாவைத் தற்போதைய சோவியற் ஆட்சிப்பீடம் ஒருபலிஆடு ஆக்கியிருக்கிறது.

மஸ்கோவிலிருந்து இவரைப்பற்றி வெளிவந்த செய்திகளிலே, "அயல்நாட்டு உளவாளி" என்பது தடபுடலாக இருந்தாலும் அந்தவிபரம் அதிகாரபூர்வமான குற்றச்சாட்டுக்களில் வற்புறுத்தப்படவில்லை. ஆனால், பேறியாவின் வழக்குக்கும், பேர்லின்நகர எழுச்சிகளுக்கும் (பேறியாவை நீக்கு முன் இவைகள் நடந்தன) நிச்சயமாக ஒருதொடர்பைக் கிறம்லின் கற்பிக்கிறதுஎன்று அங்குள்ள வெளிநாட்டு இராசதந்திரிகள் கருதுகிறார்கள். கிழக்கு ஜேர்மனி, கிழக்குப்பேர்லின் தொழிலாளர் எழுச்சிகள் "அயல்நாட்டுக் கையாட்களின்" வேலைகள் என்று சாதிக்க, கிறம்லின் முயன்றுள்ளது. இப்போது பேறியா "அயல்நாட்டுக் கையாள்" என்று அழைக்கப்படுகிறார்.

சோவியற் அரசாங்கத்தையே காப்பாற்றும்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்த பேறியாஎன்பார் உண்மையிலேயே அயல்நாட்டின் கையாளாக இருந்தாரென்று தற்போது சோவியற்அரசாங்கம் சொல்லக் கேட்கும்போது பத்திரிகைபடிக்கும் சோவியற்ஆசாமி ஒருவருக்குக் கிறுகிறுப்பு ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

இரகசியப்பொலிஸின் தலைவராயிருந்த பேறியா கைதியாகிவிட்டார். இனி என்ன? தனதுகாலத்திலே முக்கியமான பெரும்பதவிகளில் தனக்கு நம்பிக்கையான பேர்களை அவர் நியமனம் செய்திருக்கிறாரே? அவர்களுடைய கதிஎன்ன? அவர்களையும் சோவியற் அரசாங்கம் கைதுசெய்யுமா? ஒழித்துக்கட்டுமா? இதைப்பற்றி இப்போதே முன்கூட்டிச்சொலல இயலாது. என்ன இருந்தாலும், ஒழித்துக்கட்டும்வேலை சோவியற்கம்யூனிஸ்த அதிகாரவர்க்கத்துக்குப் புதிதான ஓர் காரியம்அல்ல. அவர்களின் (கம்யூனிஸ்த தலைமைப்பீடத்தைச் சேர்ந்தவர்களின்) பெயர் அடிபடுவது இந்த மாதிரிக் காரியங்களினால்தான்.

ஸ்ராலின் காலத்திலும், அதற்குப் பிறகும் தான் கிறிய கோட்டைத் தாண்டாமல் யார்யார் பரமவிசுவாசிமாக இருந்தார்களோ அவர்களையே சோவியற் ருஷியாவிலும், தோழநாடுகளிலும் பொறுப்பான உயர்பதவிகளில் பேறியா அமர்த்தினார். ஆகவே, இவர் நீக்கப்பட்டதன் விளைவு என்னவாயிருக்கும் என்பதை ஒருவாறு ஊகிக்கலாம். இதைத் தொடர்ந்து சோவியற் சாம்பிராச்சியத்தில் நிச்சயமற்ற, அதாவது குழம்பிய நிலைமை கண்டிப்பாக உண்டாகவே செய்யும். பேறியாவின் ஆட்கள் ஒவ்வொருவராக நீக்கப்படும்போது நாட்டில் குழப்பம் தலையெடுக்கவே செய்யும். இது எவ்வாறாயினும் அடிமைத்தொழிலுக்குச் சின்னமாகவிருந்த பேறியா போய்விட்டார் என்பது நிச்சயம்.

# தமிழ் வள்ளல் வேதநாயகம்பிள்ளை நினைவு

தமிழ்நாட்டில் பலதமிழ்ப்பெரியார்க்கும் நினைவுதினங்கள் ஏற்படுத்திக் கொண்டாடுவது வழமையாகிவிட்டது. தமிழை வளர்த்ததில்—அதை விருத்திசெய்ததில்—அதை வளப்படுத்தியதில்—அதை முதன்மைஆக்கியதில் சேவைகள்செய்துள்ள பெரியார்களைப் பாராட்டுவதற்காகவே அவர்களின்நினைவுதினங்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. தமிழைப் பலதுறைகளிலும் விருத்தியாக்கி வைத்தவர்களில் மாயூரம், வேதநாயகம்பிள்ளை அவர்களும் ஒருவராவர். இவர்இறந்து ஆறுபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. நிகழும் ஆடிமாதம் 21-ந்திகதி இவரின்நினைவுதினம்ஆகும்.

விற்பன்னர் வேதநாயகம்பிள்ளை அவர்கள் சிறந்தகத்தோலிக்கர். தமிழபிமானங்கொண்டவர். தமிழில் அநேக நூல்களை இயற்றியவர். உயர்ந்தநீதிபதி உத்தியோகத்திலிருந்தவர். இவருடையசரித்திரத்தைத் தமிழரனைவரும் தப்பாது அறிந்திருத்தல் வேண்டும். இவர்இயற்றிய நூல்களைத் தமிழரனைவரும் தயங்காது படிக்கவேண்டும். சிறப்பாகக் கத்தோலிக்கர்இவரை நன்கு அறிந்திருக்கவேண்டும்.

கத்தோலிக்க தமிழ்த்தொண்டர்களாய்த் தமிழுலகில் மங்காப்புகழுடன் இலங்கிவரும் தத்துவபோதகர், வீரமாமுனிவர், சாங்கோபாங்கர், ஞானப்பிரகாசர், வேதநாயகம்பிள்ளை, அந்தோனிக்குட்டி அண்ணாவியார் இவர்களைக் கத்தோலிக்கராகியநாம் அதிகமதிகமாய் அறிந்திருக்கவேண்டும். இவர்கள் இயற்றிய நூல்களையெல்லாம் படித்தறியவேண்டும்.

விற்பன்னர் வேதநாயகம்பிள்ளை அவர்கள் 1824-ம்ஆண்டு தென்இந்திய திருச்சிராப்பள்ளிக் கயிலுள்ள குளத்தூர்என்றஊரில் பிறந்தார். பத்துவயதுவரையும் அங்குதான் தமிழ்கற்றுவந்தார். பின்புநீதிஸ்தலம்ஒன்றில் மொழிபெயர்ப்பாளராயிருந்த தியாகுப்பிள்ளை என்பவரிடம் தனியாக ஆங்கிலம்படித்தார். வெகுசீக்கிரத்தில் ஆங்கிலத்திலும், தமிழிலும் பாண்டித்தியம் அடைந்தார். இளமையிலிருந்தே புத்திக்கூர்மையும், அவதான சக்தியும் மிகுதியுங்கொண்டவராயிருந்தார். இவர் கல்வியில்முன்னேறிக்கவிபாடுவதிலும் திறமையுள்ளவரானார்.

24-ம்வயதில் திருச்சிராப்பள்ளியிலுள்ள சாதாரண கீழ்நீதிஸ்தலத்தில் வேதநாயகருக்குப் பதிவுசாசனகாப்பாளர் (Record-Keeper) எனும் உத்தியோகம்கிடைத்தது. அப்போதுஅவருக்குக் கிடைத்தசம்பளம் ஐந்து வராகன். அதாவது பதினேழரைரூபாவாகும். 1850-ம்ஆண்டு இவர் திருச்சிராப்பள்ளி டிஸ்திறிக் நீதிஸ்தலத்தில் மொழிபெயர்ப்பாளர் (தொலுக்கு முதலியார்) ஆக நியமிக்கப்பட்டார். பின்பு, அங்குபுதிதாக நடத்தப்பட்ட ஒருசட்டப்பரீட்சைக்குத் தோற்றினார். இப்பரீட்சைக்குத் தோற்றிய பன்னூற்றுக்கணக்கானோருள் மூவரேதேர்ந்தெடுக்கப்பட்டனர். இம்மூவருள் இவர் முதல்வரானார். சட்டப்பரீட்சையிற் தேறியதும் தரங்கம்பாடி என்றஊரில் முன்சிப் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அடுத்தவருடம் சீர்காழிக்கு மாற்றப்பட்டுப் பிரதமநீதிபதியானார். அநேகவருடம்திறமையுடன் நீதிபரிபாலனம்செய்து புகழுற்று முதல்வகுப்பு நீதிபதியாயினர்.

பிள்ளை அவர்கள் எப்போதும் தெய்வபத்தியுள்ளவராகவே சீவித்துவந்தார். நியாயவாதிகளெல்லோரும் தெய்வபத்தியிற் தேர்ந்தவர்களாயிருக்கவேண்டுமென அடிக்கடி சொல்லிவருவார். கடைசியாக உத்தியோகத்தில் தங்குவதால் பரம்பொருளைப்பூசிக்க இயலவில்லையேஎன்று கவலைகொண்டு உபகாரச் சம்பளத்துடன் இளைப்பாறினார். பின்னர்இயல், இசை, நாடகத்தமிழ்ப் பகுதிகளில் அக்கறைஎடுத்து முன்னேறிவந்தார். இக்கலையில் தமிழ்த்தொண்டை முயன்றுசெய்தார். அதனால் அக்காலத்திருந்த தமிழ்அறிஞர் எல்லாராலும் மதிக்கப்பட்டு வந்தார். சனங்களும்இவரைக்கணித்துவந்தனர். இதன்பயனாக மாயூரம் நகராண்மைக் கழகத்துக்கு (முனிசிப்பல்சபை)த் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அங்கு இவர் தலைவராயிருந்தகாலையில் மாயூரத்தின் அபிவிருத்திக்காக அநேக நலன்கள்செய்தார். இவர் மிகுபரோபகார சிந்தையுள்ளவர். இவர் கத்தோலிக்கராயிருந்தபோதிலும் எல்லாச் சமயத்தவரிடத்தும் அப்பழுக்கற்ற தூயஅன்புள்ளவராய்ப் பழகிவந்தார்.

வேதநாயகர் எல்லாவற்றிற்கும் மேலாய்த் தமிழில் தணியாதஅன்பும், அபாரமான அபிமானமும் கொண்டிருந்தார். இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் பாடம்கேட்டவர். துறைசைஆதீனத் தலைவராகிய ஸ்ரீல ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம்சென்று தமிழ்த்தெளிவடைந்து வந்தவர். இவர் தமிழுக்கும், தமிழ்இசைக்கும் அரும்பெருந்தொண்டாற்றியவர். தமிழ், ஆரியம், ஆங்கிலத்தோடு, இயல், இசை, நாடகம், முத்தமிழிலும் முதன்மை ஸ்தானம் பெற்றவர். அரியதமிழ்நூல்களை ஏராளமாய் எழுதிக்குவித்தவர்.

தமிழில்முன்இல்லாத 'நாவல்' எனும் கதைநவீனத்தை முதன்முதல் தமிழில்எழுதியவர் வேதநாயகம்பிள்ளையேயாம். இவர்எழுதிய முதல்நவீனம் பிராதாபமுதலியார் சரிதமாகும்.

---

ஆசிரியர்
க. யோ. பேனடிக்ற்

---

இவர் இந்நவீனத்தை எழுதித் தமிழ் வளர்ச்சியில் ஒருபுதுமலர்ச்சியை உண்டுபண்ணிவிட்டார். இவருக்கு முன் இப்புதுவழியைக் கையாண்டவர் ஒருவருமில்லை. இந்நவீனத்தில் அநேக அரியவிஷயங்களைக் கண்டுமகிழலாம். சுவைக்கலாம். தமிழ்நாட்டில் இதுகாறும்வழங்கிவந்த கதைகளின் அமைதிகளை ஒன்றுசேர்த்துத்திரட்டி அவற்றிற்குப் புதுமெருகுகொடுத்து, சந்தர்ப்பத்தகுதிஅமைத்து இதனை உருவாக்கினார். இந்நவீனம் படிப்பதற்கு இன்பம்மட்டும் பயப்பதல்ல. வாழ்க்கைப்பயனுக்கு வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது இந்நவீனத்தில் தமிழைப்பற்றிக் குறிப்பிட்டிருக்குந்தன்மை இவருக்குத் தமிழில்இருந்த தனிஆர்வத்தைத் துலக்கிக்காட்டும். இவருடைய வசனநடை எளியதாகவும், சுவையுடையதாகவும், வீறுகொண்டதாகவும் அமைந்துள்ளது.

கத்தோலிக்க பண்பாட்டிற்குரிய அநேகநூல்களும், ஏனைப்பொதுநூல்களுமாய் வேதநாயகர்எழுதிய நல்ல நூல்கள்அநேகம். திருவருள்மாலை, திருவருள்அந்தாதி, தேவமாதா அந்தாதி, தேவதோத்திரமாலை, சத்தியவேதக்கீர்த்தனை, பெரியநாயகி அம்மன்பதிகம், தயாபரக்கண்ணிகள் முதலியன கிறீஸ்துவ பண்பாடுகளமைந்த செய்யுள் நூல்களாகும். சர்வசமய சமரசக்கீர்த்தனை, பிரதாபமுதலியார்சரிதம், சுகுணசுந்தரி சரிதம், நீதிநூல், பெண்மதிமாலை, சித்தாந்தசங்கிரகம் முதலியனபொதுநூல்களாகும். நீதிநூலில் அரியநீதிகளெல்லாம் செய்யுளில் காட்டப்பட்டுள்ளன. நீதிநூல் தமிழில் ஒருசோதிநூல்என்று சொல்லப்படத்தக்கது. சுகுணசுந்தரி சரித்திரமும் விசேஷமானதுதான். கடவுள்தன்மை, கல்விப்பயிற்சி, தாரவிதிகள், விவாகஉடன்படிக்கை, இல்லறம், அரசியல் ஆதியன விநோதசல்லாபமாக ஆங்காங்கு காட்டப்பட்டுள்ளன.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# சர்வேசுரா! பாவியாகிய என்மேல்

(சென்றவாரத் தொடர்ச்சி)

கப்பலிலிருந்தவர்கள் ஏறிச்சென்ற படகுகள் வேறுதிசையாகச் சென்றன. அவன் அருகிற்சென்ற படகுகளில் இடமில்லை. படகுகளில் இருந்தவர்களும் அவனைச் சட்டைபண்ணவில்லை. திடீரெனக் கப்பல்சாய்ந்து அப்படியே கடலில் ஆழ்ந்தது. அந்தோனி விம்மிவிம்மிஅழுதான். பெட்டியில் இருப்பதே கடினமாயிருந்தது. அழுது முடிந்ததும் அங்குமிங்கும் நோக்கினான். கப்பலும்மறைந்துவிட்டது. ஒரு மனிதனையும் காணோம்.

உப்புத்தண்ணீர் அவன்மேல்அடித்தது. சரியானவெயில். ஒருமணி நேரம் போவது ஒருநாள்போல் இருந்தது. கண்கூசாதபடி தனதுகண்களை மூடிக்கொண்டான். இரவுவந்ததும், சற்றுநிம்மதி ஏற்பட்டது. களைப்புமிகுதியால், தூங்கவிரும்பினான். ஆனால், தூங்குமிடத்துப் பெட்டியின்பிடிதவறிவிடலாம். நீரில்மிதப்பதற்காக அவன் அணிந்திருந்த றப்பர்சட்டையும் உப்புநீர்பட்டதால் பாரமாயிருந்தது.

நிலாஉதித்தது. அதைப்பார்த்ததும், அமெரிக்காவுக்கு வருமுன் வெனிஸ் நகரில் அவன்பெற்றோர் அவனை அர்ச். மார்க்குவின்கோவிலுக்கு அழைத்துச் சென்றது அவன்நினைவில்வந்தது. நல்ல நிலாவெளிச்சத்தில் அவர்கள் பூசை காணும்படி கோவிலுக்குப் போவார்கள். அவன்தாய் அவனுக்குக்கற்பித்த செபத்தையே குருவானவர் பூசை முடிந்ததும் சொல்லுவார். "அர்ச்சிய சிஷ்டமரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும் ஆமென்யேசு." அந்தச்செபம் அப்போது அவன்நினைவுக்கு வந்தது. உருக்கமாகச் செபிக்கஆரம்பித்தான். நெடுநாளைக்குப்பின் அன்றுதான் முதன்முறையாக அவன்செபித்தான். தனது இளம்பிராயத்தின் நாட்களை நினைத்துப்பார்த்தான். வீட்டைவிட்டு வந்ததும் கடவுளைமறந்ததற்காகத் தன்னையேநொந்துகொண்டான். "சர்வேசுரா, பாவியாகியஎன்மேல் இரக்கமாயிரும்... அர்ச். மரியாயே... இப்பொழுதும் எங்கள்மரணநேரத்திலும் வேண்டிக்கொள்ளும்" என்றான்.

பொழுதுவிடிந்தது. தான் இப்போது தனியேஇல்லைஎன்பதை அந்தோனி உணர்ந்தான். பெட்டிக்குஅருகே மீன் செதிள்ஒன்று காணப்பட்டது. அது நீரைச் சுற்றியடித்தது. அது ஒரு சுறுமீனின் செதிள். அது அந்தோனிக்குக்கீழே மூழ்குவதும், உயருவதும், வாலால்நீரை அடிப்பதுமாயிருந்தது. அவன் நன்குகவனித்தான். இரத்தமயமாய்க் காணப்பட்ட ஒரு பிரேதம் அருகில்மிதந்தது. சுறுஉயர வந்து அதைக்கீழே இழுத்துச்சென்றது. அந்தோனிக்குக் குமட்டிக்கொண்டு வந்தது. அவனுடைய கைகள் உயிரற்றவைபோல் இருந்தன. மூச்சுப் போய்விடுமோப்போல உணர்ந்தான்.

அர்ச். பூதாததேயுவின் கோவிலில் இருந்த அர்ச். அந்தோனியார்சுரூபம் குழந்தையேசுவுடன் அவன்கண்முன் எழுந்தது. "அர்ச். அந்தோனியாரே, என்னைக்காப்பாற்றும்படி யாரையாவது அனுப்பும்" என உருக்கமாக மன்றாடினான். அந்தஉருவம் மறைந்ததும் மாதாவின் சுரூபம் அவன்நினைவுக்கு முன் தோன்றியது. அதுவும் மறையத் தொடங்கியதும், வலதுகையை உயரத் தூக்கி உரக்கக்கூவினான்.

அவனுடையகையும், அந்தக்கூக்குரலும் அவனைக்காப்பாற்றின. கப்பலிலிருந்துதப்பி இன்னும் உயிருடன் இருந்தவர்களைத்தேடித் தூரத்தில் சென்ற ஓர்கப்பலில்இருந்த ஒருவன் அவனைப் பார்த்துவிட்டான். அந்தோனியின்அருகில் கப்பல்தீவிரமாக வந்தது. அவனைக்காப்பாற்றும்படி ஒரு ஜாக்கட்டைக் கயிற்றில்கட்டிக் கீழே இறக்கினர். வெகுசிரமத்தோடு கையைப் பெட்டியிலிருந்து விடுவித்துக் கயிற்றைப்பிடித்தான். ஆனால், பட்டிக்கையைக் கைகளால்பிடிக்க முடியவில்லை. முழங்கைகளால் ஒருவிதமாகப் பற்றினான். கப்பலிலிருந்து ஒரு படகைக் கீழேஇறக்கினர். அந்தோனி சாத்தோவின் அலுத்தமுகத்தைக் கவனித்தஒருவன் கீழேகுதித்து "தோழா, பிடியைவிடு" என்றான்.

அந்தோனிக்கு அறிவுவந்தபொழுது, தான்ஒருகட்டிலில் படுத்திருப்பதை அறிந்தான். ஒருவர் சூடானபானத்தை அவனுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தார். கடிகாரத்தில் மணிஆறு அடித்தது. அதேநேரத்தில் ஆயிரக்கணக்கான மைலுக்கப்பால் அர்ச். பூதாததேயுவின் கோவிலில் ஜேம்ஸ் சுவாமியார் திவ்வியபலிபூசை நிறைவேற்றினார். தமதுவிசாரணையிலிருந்து போய் யுத்தசேவை செய்தவர்களுக்காக அன்றுபூசையை ஒப்புக்கொடுத்தார். அவரதுவிசாரணையைச்சேர்ந்த அந்தோனி அப்பொழுது "சர்வேசுரா, உமக்குநன்றி செலுத்துகிறேன். இனி ஒருபோதுமே உமக்குத் துரோகம் செய்யமாட்டேன். என் உடல் நிறையப் பாவங்கள். நான்நடக்க நீர் பலத்தைக்கொடுத்ததும் ஒவ்வொருநாளும் பூசைக்குப்போய் என் பாவங்களுக்கெல்லாம் பரிகாரம்செய்வேன்" என்றான்.

ஒருநாள்மாலைவேளை ஒலிபெருக்கியிலே ஓர்அறிக்கை வெளிவந்தது. "கத்தோலிக்கரே! பூசைக்கு வாருங்கள். அசனசாலையின் அருகில் பூசை தொடங்கப்போகிறது."

"இந்தநேரத்திலா பூசை? அதுவும் சாப்பிடும்இடத்தின் அருகிலா?" என அந்தோனி ஆச்சரியத்துடன் கூவினான். தான்கொடுத்த வாக்கின்படியே பூசை காணச்சென்றான்.

வாலிபகுருவானவர்ஒருவர் பூசைப் புத்தகம் ஒன்றை அந்தோனியிடம் கொடுத்தார். அவருடைய பெயர் ஜோண் லார்க்கின். "தம்பி! நீ 'ஓர்னெட்'கப்பலிலிருந்து தப்பித்தவனா?" என வினவினார். "ஆம்சுவாமி. நல்லவர்களே இளம்பிராயத்தில் சாகிறார்கள்; என்னைப்போன்ற பாவிஒருவன் மோட்சத்தில் தேவஸ்துதிபாடக் கடவுள் விரும்பவில்லைஎன நினைக்கிறேன்" என அந்தோனிபதிலளித்தான்.

யுத்தம்முடிந்ததும் அந்தோனிசாத்தோ அதே வாத்தியக்கோஷ்டியில் சேர்ந்துகொண்டான். இரவிலே எத்தனைமணிக்குக் கச்சேரிமுடிந்தாலும் சரி, ஆறுமணிப்பூசைக்குத் தவறாமல் போய்வருகிறான். சிலசமயங்களிலே பூசைநேரத்தில் அலுப்பினால் அவன் தூங்கிவிடுவதுண்டு. எனினும் பூசைப் பரிசாரகன் அடிக்கும் மணிச்சத்தம் கேட்டதும் எழுந்துவிடுவான். குருவானவர் பூசையில்சொல்லும் ஒவ்வொருசெபமும் அர்த்தபுஷ்டியுள்ளதென இப்பொழுது அவன்உணருகிறான். விசேஷமாகக் குருவானவர் பாவசங்கீர்த்தனமந்திரத்தை முடித்துவிட்டுப் பீடத்திலேறுகையில் சொல்லுகிறசெபம் தனக்கென்றே எழுதப்பட்டிருப்பதாக அந்தோனிசாத்தோ உணருகிறான். "ஆண்டவரே! தேவரீருடைய மகாபரிசுத்த சந்நிதானத்தில் நாங்கள் சுத்தமனதுடன் பிரவேசிக்க அருகராகும்படி எங்கள் அக்கிரமங்களை எங்களிடமிருந்து அகற்றியருளத் தேவரீரைமன்றாடுகிறோம்."

# கத்தோலிக்க சமாச்சாரம்

## மனந்திரும்பிய பாதிரியார்

லண்டன் நகரிலே தென் ரொட்டென்காமிலுள்ள சென் பீற்றர்கோவிலின் அங்கிளிக்கன் சபைப் பாதிரியாராக முன்னர் இருந்தவரான கனம். டபிள்யு. ஈ. சி. டைக் அவர்கள் மனந்திரும்பிப் பியாக-கன்ஸ பீல்ட் எனுமிடத்திலுள்ள அர்ச். தெரேசம்மாள் கோவிலிலே வண. சி. எம். டேவிட்சன் சுவாமியாரால் கத்தோலிக்க திருமறையில் சேர்க்கப்பெற்றிருக்கின்றார். இவர் ஓர் அங்கிளிக்கனாகஇருந்தகாலத்திலே "பாதர் டைக்" என அறியப்பட்டிருந்தார். ஓர்காலத்திலே லண்டன்நகர் சென்போல் ஆசனக்கோவிலின் விசாரணைப்பாதிரிமாருள் ஒருவராயுமிருந்தார்.

## ஐவரும் சகோதரங்கள்

வண. டேவிட் பாக்கர்சுவாமியார் இங்கிலாந்திலே பிறவுனெட்ஜ் பட்டணத்திலுள்ள தேவமாதாவின்கோவில் விசாரணைப்பங்குக்குரவர். இவர் சென்றஆனிமாதம் 7-ந் திகதி ஞாயிறுவாரம் தமதுகுருத்துவ தங்கயூபிலியைக் கொண்டாடினார். இவர் இரட்டைப்பிள்ளைகளில் ஒருவர். மற்றப்பிள்ளையான இவரதுசகோதர், வண. எட்வாட் பாக்கர் சுவாமியார். இவரும்அங்கே லெய்லன்ட்எனுமிடத்திலுள்ள தேவமாதாவின கோவிலில் தமதுகுருத்துவதங்கயூபிலியைக் கொண்டாடினார். இவர்களின் இளைய சகோதரரான வண. அன்செல்ம் பாக்கர் சுவாமியார் லெய்லன்ட்எனும் இடத்திலேயே ஆசீர்வாதப்பர் சபை மடாதிபராக இருந்துவருகின்றார். இம்மூவரினதும் இளையசகோதரரே நோர்தாம்ரன்நகர் மேற்றிராணியாரான லேயோ பாக்கர் ஆண்டவர். இந்த நால்வரினதும் சகோதரி ஒக்ஸ்வோட்டிலே ஓர்கார்மேல் சபைக் கன்னியாஸ்திரீயாக இருந்துவருகின்றாள்.

## மதலேனம்மாள் கல்லறை

புராதனப்பொருள்ஆராய்ச்சி நிபுணர்களில் ஒருவரான பேராசிரியர் மசிஞ்ஞோன் அவர்கள் எப்பேசுஸ் நகரிலிருந்த அர்ச். மரியமதலேனம்மாளின் கல்லறையைக் கண்டுபிடித்துவிட்டதாகக் கூறுகிறார். தேசியுஸ் என்ற ரோமைச் சக்கரவர்த்தி காலத்தில் நடைபெற்ற கொடிய வேதகலாபனையின்போது ஏழு கிறீஸ்தவ வாலிபர்கள் [மாக்ஸிமியன், மால்க்குஸ், மர்த்தீனியன், தெனிஸ், ஜோன், செராப்பியோன், கொன்ஸ்தாந்தின்] ஒருகுகையில் உயிருடன்புதைக்கப்பட்டனர். இந்தக்குகையின் வாயிலில்தான் மரியமதலேனம்மாளின் திருவுடல் அடக்கம்பண்ணப்பட்டிருந்ததாக மசிஞ்ஞோன்அவர்கள் கூறுகிறார். இவ்வாறு இவர்சாதிப்பதற்குக் காரணம் என்னவென்றால், நமது திவ்விய இரட்சகரைப் பின்சென்ற புண்ணியஸ்திரிகளுள் ஒருத்தி அக்குகையின் வாயிலில் அடக்கஞ்செய்யப்பட்டிருப்பதாகவும், அந்தஏழுவேதசாட்சிகள் இளைப்பாறும்இடத்தை எவரும் பங்கப்படுத்தாவண்ணம் அதைப்பாதுகாத்து வருவதற்காகவே அப்புண்ணியவதியின் சரீரம் அங்கு அடக்கஞ்செய்யப்பட்டதாகவும் எப்பேசுஸ்நகரிலும், சுற்றுப்புறங்களிலுமுள்ள சனங்களிடையே பாரம்பரியமான செய்தியொன்று உலாவிவருகிறது. இந்தப் புண்ணியஸ்திரி அர்ச். மரியமதலேனம்மாள்தான் என்று பேராசிரியர் மசிஞ்ஞோன் அவர்கள் கூறுகிறார்.

அர்ச். மரியமதலேனம்மாள் தேவமாதாவுடன் எப்பேசுஸ் நகருக்குச்சென்று தங்கியிருந்ததாகவும், அங்குதான் அவள் மரித்து அடக்கஞ்செய்யப்பெற்றதாகவும், பின்னர் 10-வது நூற்றாண்டில் அவளது திருமேனி கொன்ஸ்தாந்திநோப்பிள்நகருக்கு எடுத்துச்செல்லப்பட்டதாகவும் ஒருவரலாறுகூறுகிறது. இன்னும் அவள் மார்சேல்ஸ்நகரை அடுத்துள்ள சேன்த்-போம் (Sainte-Baume) என்றகுன்றிலுள்ள ஒருகுகையில்சென்று அங்குமுப்பதுவருடம் சீவித்திருந்ததாக மற்றொருவரலாறுகூறுகிறது. அவளுடையசிரசு சேன்த்-போம்குகையில்தான் இப்பொழுது இருந்துவருகிறது.

## மனந்திரும்பிய பாதிரிமார்கள்

இங்கிலாந்திலே மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொண்ட பாதிரிமாருக்கும், அவர்களின் மனைவிமக்களுக்கும் உதவிசெய்வதற்கென இருந்துவரும் சங்கமானது சென்ற 1952-ம் ஆண்டிலே அவர்களுக்குஉதவிப்பணமாகப் 15,300 பவுணுக்குமேல் உபகரித்திருக்கின்றது. புதிதாகமனந்திரும்பிய ஆறு பாதிரிமார் சென்றவருடத்திலே உதவிசெய்யப்பட வேண்டியிருந்தனர். ஆனால், உதவிபெற்ற 94 பேருள் மனந்திரும்பிய அங்கிளிக்கன் சபைக் கன்னியாஸ்திரிமாரும், மனந்திரும்பிய பாதிரிமாரின் விதவைகளும் அடங்கியிருந்தனர். சென்றதைமாதத்திலே உதவிபெற்றவர்களின் தொகை நூற்றுக்கு மேற்படலாயிற்று. அதாவது 181 பேர் உதவிபெற்றனர். எட்டுப்பிள்ளைகளுடன் கூடியவரான மனந்திரும்பிய ஓர்பாதிரியாருக்கு உதவிசெய்யுமிடத்து உதவிபெறுவோர் எட்டுப்பேராகின்றனர். சென்றவருட இறுதியிலே பாதிரியார் ஒருவர் கத்தோலிக்கராயினர். அவரதுகுடும்பத்தில் ஆறுபேர் உள்ளனர். 50 வயதுக்குமேற்பட்டவரான இவருக்குச் சீவனத்துக்கு யாதாமோர்பாதையுமில்லை. என்றாலும்அவர் தமது குடும்பத்துடன் கத்தோலிக்க திருச்சபையிற்சேர்ந்துகொண்டதையிட்டு ஆச்சரியப்படாதவர்கள் இல்லை.

# ஜெருசலேமும் ரோமைநகரும்

S. Nicholas, O. M. I.

தமிழாக்கம் ஆசிரியர் வி. பி. மரியாம்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

அதன் அழகிய மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் என் கண்ணுக்குத் தெளிவாய்ப் புலப்பட்டன. ஆனால், அந்தோ! அவைகளெல்லாம் இடிந்து சிதைந்து அழிவுற்றிருப்பதைக் கண்ணுற்றேன். பழையஆரவாரம், ஆடம்பரம் யாவும்அடங்கிப்போய் எங்கும் ஒரே அமைதி நிலவியது. ஆங்காங்கு பலசித்திரப்பதுமைகள், சிற்பநுட்பங்களிற் சிறந்தசிலைகள், கற்றூண்கள், மற்றும்விசித்திர வேலைப்பாடமைந்த வில்லுகள்யாவும் இடிந்தனவும், இடியாதனவுமாய் அரைகுறையாகத் தப்பியொட்டியிருப்பதையும் கவனித்தேன். இவைகளெல்லாம் ரோமைநகரின் பொற்காலச் சரித்திரப்பெருமையின் பொறுப்புள்ள சான்றுகளாய் விளங்குகின்றன.

ரோமைநகர் ஏழுகுன்றுகளின்மேல் நிறுவிநிற்பதை அவதானித்தேன். இக்குன்றுகள் ஏழு தீபஸ்தம்பங்கள்போன்று பரப்பியஒளியானது அயலிலே அலைமோதிச் சலசலவெனப் பாய்ந்தோடிய தைபர்நதியினை மின்னலைப்போல மிளிரச்செய்தது. குளோடியசின் குன்றுகள்மீது ரோமியூலசும், ரீமசும் சேர்ந்து ஆகாயத்தை அளாவும்படியாகக் கட்டியெழுப்பிய ரோமைநகரும் உலகப்பிரசித்திபெற்ற ஏனைய எழில்மிகுநகரங்களைப்போலவே வீழ்ச்சியுற்றமை உண்மைச்சரித்திர சம்பவமாகும்.

ஆனால், எவரும் நம்பமுடியாதவிதமாய் அந்நகரம் வீழ்ச்சியடைந்தும் அடையாததுபோற் தலைநிமிர்ந்துநிற்பது வியக்கத்தக்கதொன்றாகும். அதன்சக்கராதிபத்தியம் அழிந்தொழியலாயிற்று. ஆனால், அது குன்றாப்புகழ்பெற்று, மேன்மேலும் குறையாச்சிறப்புற்றுப் பாருலகெங்கும் தனது ஞானச்செல்வாக்கைச் செலுத்துவதாகிய தனிப்பெருமை அடையவேண்டுமெனச் சர்வேசுரன்திருவுளங்கொண்டார். இசிறவேல்தேவனின் செயல்கள்யாவும் அதிசயமானவைகள். அவர்மனித வாழ்க்கைக்கு வேண்டுவனவற்றை மக்கள்பெற்று இன்புடன் வாழும்படியாக வகுக்குங்காரியங்களோ விசித்திரமானவைகள். இவற்றையெல்லாம் மனித புத்தியால்மாத்திரம் ஆராய்ந்தறிதல் இயலாக்கருமம். தமது நிறைந்தஞானத்தின் வல்லபத்தினாலே ரோமைநகர் சர்வதேசங்களிலும், சமஸ்தசாதிசனங்களிலும் ஆதிக்கம்செலுத்தும் பூரணதத்துவத்தைப் பெறுவதாகிய அதிர்ஷ்டத்தை அடையவேண்டுமென அவர் சித்தங்கொள்ளலானார். அகிலமுழுவதிலும் மலைவிளக்கென்னப் பிரபைகாலும் பாக்கியமானபதவிக்கு அத்திருநகர் உரிமையுடையதாயிற்று.

முன்னோர்காலம் முடிமன்னர்களும், பெரியசக்கரவர்த்திகளும் வீற்றிருந்து செங்கோலோச்சிய சிங்காசனத்திலே கலிலேயநாட்டினரான ஏழைக் கடற்தொழிலாளிஒருவர் வீற்றிருக்கும்படிசெய்தது, தேவதிருவுளச்செயல். பார்முழுவதும் அவரைப் பரிசுத்தபிதாவெனப் பரிவாயழைத்து, வணங்கிவழிபட்டு நிற்கச் செய்ததும் ஆண்டவரின அருட்செயல். கோடிக்கணக்கான கத்தோலிக்க மக்கள் மிகுந்தபயபக்தியுடன் ஏற்று விசுவாசிக்கும் வேதசத்தியங்கள் யாவும் வெளிவரும் சத்தியஊற்றின் உற்பத்திஸ்தானமாக ரோமைநகர் உருவாகியதும் ஓர் அற்புதமன்றோ! இத்தகைய பெருமாற்றங்கள் இலகுவில் ஏற்படக்கூடியனவன்று. இதற்குப்போந்தசான்றுகள் இதிகாசத்தில் பரக்கஉண்டெனலாம். "பாடின்றிப் பட்டமில்லை" என்பர் அறிஞர்கள். உலகில் இதுவரைநடைபெற்றுள்ள பெரியபெரிய மாற்றங்களெல்லாம் புரட்சி, போர் ஆதியனவற்றின் விளைவாகவே உண்டாயின. மனுக்குலத்தைஈடேற்ற மனுமகனாய்ப்பிறந்த எல்லாம்வல்ல இறைவனே — யேசுக்கிறீஸ்துநாதரே பாடுகள் பட்டாரெனில் அப்பாற் சொல்லவும் வேண்டுமா! சிலுவையில் உயிர்நீத்த சிரோரத்தினமாகிய தேவசுதன், பரலோகத்துக்கு எழுந்தருளிப் போகுமுன் தமது அப்போஸ்தலர்களைப் பார்த்து, உலகமெங்கும்போய்ச் சுவிசேஷத்தைப் போதியுங்கள் என ஆஞ்ஞாபித்தார்.

ஆண்டவரும், அன்புமிக்க திவ்வியகுருவுமாகிய யேசுபெருமான் விதித்தவழியே அப்போஸ்தலர்கள் அவர்ஆணையைச்சிரமேற்கொண்டு அவர்அருளிய திருவேதத்தைப் போதிக்கச் சென்றார்கள். அர்ச். பேதுருவானவர் அஞ்ஞான அந்தகாரத்திலே அமிழ்ந்திக்கிடந்த ரோமைநகரை அடைந்தார். அங்கு கிறீஸ்துநாதரின் சத்திய திருமறையை அஞ்சாநெஞ்சுடன் யாவர்க்கும் போதிக்கத்தொடங்கினார். அவருடைய அரியபோதனைகள் நன்னிலத்தில் வீழ்ந்த நல்லவிதைகள்போல் பலரின் உள்ளங்களிலும் பதிந்து பதின்மடங்கு பலன் அளித்தன. அநேகர் ஞானஅறிவுபெற்று மனந்திரும்பிக் கிறீஸ்துசமயத்தைத் தழுவிக்கொண்டார்கள். நாட்டினநாலுதிக்குகளிலும் தேவாலயங்கள் நவமாகத்தோன்றின. தேவாராதனை வழிபாடுகள் தினமும்தவறாது நடந்தேறின. மெய்யானதேவனும், மெய்யான மனுஷனுமாகிய யேசுக்கிறீஸ்துநாதர்தாமே ஸ்தாபித்த கத்தோலிக்க ஒரேதிருச்சபை ரோமைநகரின்கண் தலையிடம் வகிக்கவேண்டுமென்று அவர் திருவுளமானாற்போல அதன்ஒப்பற்ற சின்னமாகிய திருச்சிலுவை அங்கு ஸ்திரமாக நிறுவப்படலாயிற்று.

(தொடரும்)

## ஆடி மாதம்

போதுக் கருத்து :— தனிமனிதனுக்குரிய மதிப்பை யாவரும் எங்கும் வழங்கும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன் கருத்து :— உண்மையைப் பரப்புவதற்கு அச்சியந்திரம், றேடியோ, சினிமா உதவும்படியாக மன்றாடுவது.

### திருநாள் அட்டவணை

**ஆடிமாதம் — 1953**

| | | | |
|---|---|---|---|
| வெ | 24 | அ. கிறிஸ்தீனம்மாள், க. வே. | (ஊ) |
| சனி | 25 | அ. யாகப்பர், அ. | (சி) |
| ஞா | 26 | இஸ்பிரீத்து ஆகம. பின் 9-ம் ஞாயிறு — அ. அன்னம்மாள் | (வெ) |
| திங் | 27 | அ. பந்தலேயோன், வே. | (சி) |
| செ | 28 | அ. நசாறியுஸ், பா. | (சி) |
| புத | 29 | அ. மார்த்தம்மாள், க. | (வெ) |
| வி | 30 | அ. அப்தோனும் சென்னேனும், வே. | (சி) |
| வெ | 31 | அ. லோயலா இஞ்ஞாசியார், கு. | (வெ) |

சத்தியவேத
பாதுகாவலன்
1953-ம் ஆண்டு
ஆடி மாதம் 23-ந் திகதி

## அரிசிக்கலவரம்

பிறநாடுகளிலிருந்து அரசாங்கம் இறக்குமதிசெய்கின்றஅரிசியைக் கொள்வனவிலும் மிகக் குறைந்தவிலையிலே— அதாவது படியொன்று 82 சதம்முடிய வாங்கி 25 சதமாக—மக்களுக்கு விற்பனைசெய்து வரலாயிற்று. இவ்விதம் விற்பனைசெய்யும் ஒவ்வோர்படிஅரிசியிலும் ஏற்படும் நஷ்டமாகிய 57 சததத்தையும் அரசாங்கமே பொறுத்தது. அதற்கென்று கோடிக்கணக்கான ரூபா உதவிமான்யம் அளித்துவரலாயிற்று. ஆனல், இன்று தனக்குஏற்பட்டிருக்கும் பணக்கஷ்டத்தை முன்னிட்டு இந்தஉதவிமான்யத்தை அது வெகுவாகக் குறைத்து — அதாவது படிஒன்று 82 சதம் முடியவாங்கிப் 12 சதங்குறைத்து—70 சதமாகவிற்கத் தீர்மானித்து, அதனல் தனதுஉதவிமான்யத்தை வெகுவாகக் குறைத்துவிடவே, சென்ற 20-ந் திகதிமுதல் ஒருபடிஅரிசி 70 சதமாக விற்கப்பட்டு வருகிறது. ஆனல், பங்கீட்டரிசியைக் கூட்டியிருப்பதுடன், பங்கீட்டரிசிக்கு மேலாக இறக்குமதிசெய்தஅரிசியைப் படிஒன்று 86 சதமாக வாரம்ஒன்றுக்குஐந்துபடிஅரிசி எவருமேவாங்கிக்கொள்ள வசதியளித்துமிருக்கிறது.

அரசாங்கம் 25 சதமாகவிற்றுவந்த அரிசியை 70 சதமாக ஏற்றிவிற்பதும், தபால், தந்தி, தெலிபோன் சலார்விகிதங்களை ஏற்றிவிட்டதும் நீதியான செயலா? அநீதியான செயல்தானென்று ஈண்டுநாம் ஆராய முன்வரவில்லை. ஆனல், ஊருக்குள்ளதுதான் உடையாருக்கும் என்பதையும் நாம் உணராமலில்லை. ஆயினும், சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கும் எதிர்க்கட்சிகள் — அக்கட்சிகளைச்சேர்ந்தவர்கள் "காற்றுள்ளபோதே தூற்றிககொள்; கரும்புள்ளபோதே ஆட்டிக்கொள்" என்பதற்கிணங்க இச்சந்தர்ப்பத்தைப்பயன்படுத்திக்கொள்ள முனைந்தமையானது வருந்தத்தக்கதாகும். பாராளுமன்றத்திலே கவர்னர் - ஜெனறலின் சிம்மாசனப்பிரசங்கம்பற்றி நிகழ்ந்த விவாதத்தின்போது, எதிர்க்கட்சிகளைச்சேர்ந்த இந்த அங்கத்தவர்களில் எவராவது அரசாங்கம் தனக்குண்டான பணக்கஷ்டத்தைச் சமாளிக்கத் தக்கதாய் அரிசிஉதவிமான்யத்தைக் குறைப்பதற்குப்பதில் கையாடக்கூடிய யாதாமோர் உபாயத்தைக் கூறினரா? ஆடுநனைகிறதேயென்று ஓநாய் உருகி அழுதவாறு இவர்களும் மக்கள் கஷ்டப்படப் போகிருர்களே என்று மாரடித்தார்கள் அல்லாது மக்களுடையவும், அரசாங்கத்தினுடையவும் கஷ்டத்தைப்போக்கக்கூடியதாய் ஏதாவதொரு ஆலோசனையை எடுத்துக்கூறினரா?

அனறுநிகழ்ந்த கூட்டம்ஒன்றிலே, "அரிசிக்கான உதவிமான்யத்தை அகற்றியதை எதிர்த்துத் தென்பகுதியில் ஏற்கனவே கிளர்ச்சி ஏற்பட்டுவிட்டது; வடபகுதியிலுள்ள நீங்களும் பின்போகப்படாது" என்று ஒருவர் கூறினர். "தற்போதுள்ள அரசாங்கத்தைக்கவிழ்த்துவிட்டு, அதனிடமாக மக்களின் அரசாங்கம் [ கம்யூனிஸ்தஆட்சி ] ஒன்றை அமைப்பதற்கு உதவிசெய்ய யாழ்ப்பாண மக்களே எழுமின்" என மற்றொருவர் கூறினர். "வறியமக்களின் கஷ்டங்களைப் போக்குவதற்காகச் சகலஎதிர்க்கட்சிகளும் ஐக்கியப்பட்டு நிற்கவேண்டிய இச்சந்தர்ப்பத்திலே சிலபேச்சாளர்கள் கட்சிப்பிரசாரஞ் செய்யும் மனப்பான்மையைக் காட்டியிருக்கிறார்களே" யென்று இன்னெருவர் உண்மையை எடுத்துச் சொல்லிஇரங்கினர். பாராளுமன்றத்திலே உங்களது அங்கத்தவர்களாய் இருப்பாரின் வீடுகளுக்கு ஆயிரக்கணக்கிலே சென்று, அரசாங்கம் திரும்பவும் அரிசிக்கான உதவிமான்யத்தைக் கொடுக்கச் செய்யுங்கள், அன்றேல் உங்கள்ஸ்தானங்களைவிட்டு வெளியேறுங்களென்று கேட்கும்படியாய் ஒருவர் மதிகூறினர். இவ்வாறாக, அவர்கள் உள்ளொன்றுவைத்துப் புறம்பொன்று பேசினர்களென்பது புலப்படாமற்போகவில்லை. "அழுவார் அழுவாரெல்லாம் தன்கரைச்சல், திருவன் பெண்டிருக்கு அழுவாரில்லை" என்றபாடாகவே இவர்களின்பாடு மாயிற்றெனலாம்.

மக்கள் அனுபவிக்கப்போகும் கஷ்டங்களையிட்டு உள்ளபடியே அனுதாபங்கொண்டு வந்திருப்பின் அவர்கள் பேசியிருக்கவேண்டியது வேறு. அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கும் பணக்கஷ்டத்தையும், மக்களுக்குஏற்பட்டிருக்கும் மனக்கஷ்டத்தையும் சகலருக்கும் தெளிவாக உணர்த்தியிருக்கலாம். அதனல் ஆடம்பரவாழ்க்கையை அறவே ஒழித்துக் காலத்துக்கேற்றவிதமாய்க் கட்டுமட்டாய்வாழப் புத்தி புகட்டியிருக்கலாம். உணவுப் பொருட்களை அதிகமதிகமாக உற்பத்திசெய்யும்படி ஊக்கப்படுத்தியிருக்கலாம். அரிசிச் சாதத்தைக்குறைத்து முன்னேரைப்போலச் சிறுதானியவகை, கிழங்குவகை, பனம்பொருட்கள், பிறஉணவுப்பொருட்கள் ஆதியவற்றை அதிகமாகப் பாவிக்குமாறு ஆனமதிகூறியிருக்கலாம். மதுபாவனையை — படக் காட்சி பார்ப்பதை—வேடிக்கை விநேதங்களுக்குச்செல்வதை—அவசியமின்றிப் புடவைகள் வாங்குவதை—வீண்செலவை நிறுத்திவிட, அன்றேல் குறைத்துப் பிடிக்க மக்களைத் தூண்டியிருக்கலாம். வியாபாரிகள் ஊர் அரிசிவிலையைக் கண்டபடியெல்லாம் உயர்த்தாது உபாயஞ்சொல்லிக் கொடுத்திருக்கலாம். இவைகள் ஒன்றையும் சிந்தியாது வாளா பேசுவதெல்லாம் மக்களைஏமாற்றுவதுபோன்ற மதியீனமான செயலேயாகுமன்றோ!

---

### இஸ்பிரீ. ஆகமனத்தின் பின்

## 9-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

( லூக். 19 : 41—47 )

அர்ச். லூக்கா எழுதிவைத்தபடி பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி :— அந்தக் காலத்திலே யேசுநாதர் யெருசலேம் நகரைச்சமீபித்த மாத்திரத்தில் நகரத்தைப் பார்த்து, அதின்பேரில் கண்ணீர்விட்டு, வசனித்ததாவது : உனக்குக் கிடைத்த இந்த நாளிலாவது உன் சமாதானத்துக்கு உரியவைகளை நீ அறிந்திருந்தாயில்லையே; இப்பொழுதோ அவைகள் உன்கண்களுக்கு மறைவாயிருக்கின்றன. ஆகையால் உனக்கு ஒரு காலம் வரும்; அப்போது உன் சத்துருக்கள் உன்னைச் சுற்றிலும் அகழிவெட்டி, உன்னைச் சூழவளைந்து எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரைமட்டமாக்கி, உன்னிடத்தில் கல்லின்மேல் கல் நிற்கவிட்டார்கள். ஏனெனில், உனக்குத் தந்த சந்திப்பின் காலத்தை நீ அறியாமற் போனுய் என்ருர். பின்புஅவர் தேவாலயத்தில் பிரவேசித்து, அதிலே விற்கிறவர்களையும் வாங்குகிறவர்களையும் வெளியேதுரத்தத்தொடங்கி : என் வீடு செபவீடு என்று எழுதியிருக்கிறதே; நீங்களோ அதைக் கள்ளர்குகையாக்கினீர்கள் என்ருர். மேலும் அவர் அநுதினமும் தேவாலயத்தில் போதித்துககொண்டிருந்தார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

— மலையாளத்திலே யக்கோபித்த பிரிவினைச்சபையிலிருந்து மனந்திரும்பியவரும், திருவனந்தபுரத்துக்கத்தோலிக்க அதிமேற்றிராணியாராய் விளங்கியிருந்தவரும், கீர்த்திபெற்ற கல்விமானுமாகிய மகா மேன்மைதங்கிய மார்இவானியோஸ் ஆண்டவர் சென்ற வியாழக்கிழமை காலஞ்செல்லலாயினரெனச் செய்தி கிடைத்திருக்கிறது.

## பிறெடெறிக் ஓசானம்

ஏழை மக்களின் துன்பங்களைத் துடைப்பதையே தமது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு, அரும்பெரும் பணியாற்றிய சேவைவீரரும், தியாகசீலருமான பிறடெறிக் ஓசானம் அவர்கள் மரணமான நூறும் ஆண்டு இவ்வருடம் புரட்டாசி மாதம் 8-ந் திகதி பூர்த்தியாகின்றது. அந்நாளும், அதையடுத்துவரும் சிலதினங்களும் உலகெங்குமுள்ள அர்ச். வின்சென்ற் டீ போல்சபை அங்கத்தினருக்கு நன்னுட்கள்! இந்த நாட்கள் ஓசானம் நினைவு நாட்களாகத் திகழும். அப்போது ஓசானம் அவர்களின் பூதவுடல் அடக்கஞ் செய்யப்பட்டுள்ள பரீஸ்மாநகரிலே பலநாடுகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் ஒன்றுகூடவிருக்கின்ருர்கள். மறைந்த தியாகியை நினைவுகூர்ந்து அவருக்கு மரியாதை செய்யும் முறையிலே அவர் கலலறையிலும், மற்றும் ஆலயங்கள், பல சேவைக்கழகங்களிலும் விசேஷநிகழ்ச்சிகள் நடைபெறும். அவ்வமயம் ஓசானம் அவர்களின்சீரியசிந்தனையிலும், சேவைஆர்வத்திலும் உருவான அர்ச். வின்சென்ற்டீபோல் சபையின் அரியசாதனைகள் கத்தோலிக்க உலகிற்கு எடுத்துக் காட்டப்படும். இம்மாபெரும் இயக்கத்தின் எதிர்கால வளர்ச்சிக்கான புதியதிட்டங்கள் செய்யப்படும்.

இந்தியாவிலே கல்கத்தா, பம்பாய், சென்னை, திருச்சிபோன்ற முக்கியநகரங்களில் ஓசானம் நூற்ருண்டுவிழா கொண்டாடப்படும். தமிழ்நாட்டிலே திருச்சி நகரில் ஆவணிமாதம் 21-ந் திகதியிலிருந்து ஏழுநாட்களாக இவ்விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படும். திருச்சி அர்ச். வின்சென்ற் டீபோல் நிர்வாகசபையின் ஆதரவில் சபையின் அங்கத்தினருக்கும், உபகாரிகளுக்கும் பிரத்தியேகமான தியானமும், பக்திமுயற்சிகளும் நடத்தப்படும். நகரிலுள்ள எல்லா அங்கத்தினரும், உபகாரிகளும், பொதுமக்களும் இவ்விழாவில் கலந்துகொள்வர். இவ்விழாவையொட்டி நிர்வாக சபைஆதரவில் ஒரு கட்டுரைப் போட்டி நிகழ்த்தப்படும். இதில் திருச்சி மேற்றிராசனத்தில் உள்ள கத்தோலிக்க மாணவர் மாணவிகள் யாவரும் கலந்துகொள்ளலாம். வின்சென்ற் டீ போல் சபையைப் பற்றியும், அதன் பலதிறப்பட்ட சேவைகளைப்பற்றியும் எழுதப்படும் சிறந்த கட்டுரைகள் சிலவற்றிற்குப் பரிசுகள் வழங்கப்படும்.

இன்னும் கண்காட்சிஒன்றும் திறந்துவைக்கப்படும். கத்தோலிக்க சமூகசேவைகளை விவரிக்கும் சித்திரங்கள், புகைப்படங்கள், குறிப்புகள் இதில் இடம் பெறும். இதற்கான காட்சிப் பொருட்கள் கத்தோலிக்கமாணவர் மாணவிகளிடமிருந்தும், தனிப்பட்டவர்களிடமிருந்தும் வரவேற்கப்படவிருக்கின்றன. சிறந்தகாட்சிப் பொருட்களுக்குப் பரிசுகள்உண்டு.

## கரம்பன் தபால்

கரம்பன்பதியிலே கண்ணுற்றார் மனதைக் கவருந்தன்மையிலே அலங்காரமாகக் கட்டியெழுப்பப்பெற்றிருக்கும் அர்ச். செபஸ்தியாரின் புதியஆலயமானது சென்ற 4-7-53 சனிவாரம் ஆசீர்வதிக்கப்பெற்றுப் புதியபீடத்திலே சகலருக்குமாக ஓர் பாடற்பூசை நிறைவேறியது. அதிலே 40 பிள்ளைகள் வரையில் புதுநன்மைபெற்று அச்சுபநாளை ஓர்பெருநாளாகக் கொண்டாடினார்கள். பூசையின்பின் ஆலயத்திலே புனிதமாகச் சித்தஞ்செய்யப்பட்டிருந்த ஓர்இடத்திலே அர்ச். சதாசகாயமாதாவின் அழகானபடம்ஒன்று ஆசீர்வதித்து ஸ்தாபிக்கப்பட்டு, அத்திருநாயகியின் பாதுகாவலிலே கரம்பன் பதிமக்கள் ஒப்படைக்கப்பெற்றார்கள்.

பின்னர் அன்றுசாயந்தரம் கொடியேற்றத்துடன் அர்ச். செபஸ்தியார் திருநாளின் ஆயத்த திருவிழாக்கள் ஆரம்பமாயின. பின்னர் 8-ந் திகதி ஐந்தாம் திருவிழாவன்று தொடங்கிய ஞானஒடுக்கம் 12-ந் திகதி கடைசித் திருவிழாவரையிலே வண. ஜே. ஏ. இராசநாயகம் சுவாமியவர்களால் காலையிலும் மாலையிலும் பெரிதும் அருட்சிக்குரியதாய் ஐந்துதினங்களாகப் போதிக்கப்படலாயிற்று. ஐந்து தினங்களிலும் பாரிய புதிய ஆலயமானது மக்களால் தேங்கியிருந்தது. சுவாமியவர்கள் ஞானஒடுக்கம் போதித்ததுடன் பிள்ளைகளுக்கு ஞானஆலோசனைக் கூட்டங்களும் நடத்தினார். ஞானஒடுக்க முடிவுநாட்களிலே பாவசங்கீர்த்தனங்கேட்க யாழ்ப்பாணத்திலிருந்து குருமார் வந்திருந்தார்கள்.

திருநாளாகிய 13-ந் திகதியன்று காலை 7 மணிக்கு மகாவந். மேற்றிராணிஆண்டவர் குருமார், பூசைப்பரிசாரகர்சமேதராய்ப் பலிபீடத்திற்கெழுந்தருளித் திவ்வியபூசை நிறைவேற்றினார். அவ்வேளை பெருந்திரளான மக்கள் சமூகமாயிருந்து, திவ்விய நன்மைபெற்றார்கள். அதன்மேல் ஆண்டவர்அவர்கள் உறுதிப்பூசுதலைப் பற்றி அரியதோர் பிரசங்கஞ்செய்து, ஏறக்குறைய 50 பேருக்கு உறுதிப்பூசுதல் அருளிச் சகலரையும் ஆசீர்வதித்தருளினார்.

பின்னர் ஆண்டவர்அவர்கள் அழகுற்றுவிளங்கிய அர்ச். செபஸ்தியார் கலாசாலைக்கு வாத்தியவரிசைகளுடன் பட்டுக்குடைகள் நிழற்ற நிலபாவாடை மீது அழைத்துக்கொண்டுவரப்பெற்று உயராசனத்தெழவே, பரிமளிப்பான வரவேற்பு உபசாரம் நடைபெற்றது. சிறியபுஷ்ப ஆங்கிலகலாசாலைப் பிள்ளைகள் வரவுசோபன கீதம்பாடினார்கள். இளைப்பாறிய சிருப்பர் திரு. பி. ஏ. தோமினிக்அவர்களும், கரம்பன்விதானையார் திரு. எஸ். தியாகராஜா ஐயர்களும் ஆண்டவர் அவர்களை நல்வரவேற்று இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். அதன்மேல் பாடசாலைப்பிள்ளைகள் தங்கள் ஆடல்பாடல்களினால் அனைவரையும் மகிழச்செய்தபின், கட்டளைக்குரவர் வண. ஏ. எஸ். சிங்கராயர் சுவாமியவர்கள் ஆண்டவர் அவர்களுக்கும், ஞானஒடுக்க போதகருக்கும், ஆலயதிருப்பணிக்குப் பணமுபகரித்தஅனைவருக்கும், அன்றைய வைபவத்தைச் சிறப்பாகநடத்திய பெரியோருக்கும் நன்றித்துதிகூறினார்.

ஈற்றில் மேற்றிராணியாண்டவர் எழுந்து, தமக்குஅளித்த வரவேற்புக்காக நன்றிகூறினார். அத்துணைசிறப்பாகப் புதியஆலயத்தைக் கட்டியெழுப்பியதற்காகக் கட்டளைக்குரவரையும், கிறீஸ்தவர்களையும் புகழ்ந்துபாராட்டினார். கோவில்என்பது உங்கள்ஞான உயிராயுள்ளது;ஒவ்வொருவர் இதயத்திலும் உயிரும்ஒளியும் பிறப்பிப்பது;வரப்பிரசாதத்தின் வழியாயிருப்பது; ஆதலால்எல்லோரும் கோவிலிலே மிகுந்த அபிமானங்கொண்டு ஆனஉதவிபுரிந்து மீதியானவேலையையும் முடித்து, அதனைப்பூர்த்திசெய்யுமாறு கூறி ஆசிவழங்கியதும் வரவேற்புவைபவம் இனிதேநிறைவேறியது. — நிருபர்

## அர்ச். மரியகொறெற்றியின் திருநாள்

கற்பைப் பாதுகாக்குமாறு தனது ஆருயிரையே தியாகஞ்செய்த சிறிய கன்னிகா லீலியான அர்ச். மரியகொறெற்றியின்திருநாள் அனுராதபுரி, அர்ச். சூசையப்பரின் ஆலயத்திலே நிகழும் 6-7-53 திங்கட்கிழமை முதன்முறையாகக் கொண்டாடப்படலாயிற்று. முந்திய ஆனிமாதம் 29-ந் திகதி தொடங்கிய ஆரம்பஉற்சவங்கள் அர்ச். சூசையப்பர்கல்லூரி விடுதிச்சாலைமாணவர்களும், கன்னிகாமடத்து மாணவிகளும், மற்றும்கத்தோலிக்கமக்களும் திரளாகச் சமுகமளிக்கச் செபவோசை, சங்கீதஓசை மத்தியிலே சிறப்பாக நடந்தேறின. அர்ச். மரியகொறெற்றியின் திருச்சுரூபம் கண்ணாடிப்பேழைஒன்றில் வைக்கப்பெற்று, சுகந்தபுஷ்பங்களினாலும், மின்சாரதீபங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. விடுதிச்சாலை மாணவர்களைக் கண்காணித்துவரும் சுவாமியார் கன்னிகாலீலியின் சீவியவரலாற்றை எடுத்துரைத்தார். அதனை முதன்முறையாகக் கேட்டிருந்தவர்கள் மனவருட்சிகொண்டவர்களாய் அக்கன்னிகாரத்தினத்தைக் கண்டுபாவிப்பதாகத் திடசங்கற்பஞ்செய்து, தினமும் அவள்செபத்தைச் சொல்லிவருகின்றனர். திருநாளன்று காலை 6-30 மணிக்குப் பாட்டுப்பூசைநிறைவேறியது. பிற்பகல் 4-30 மணியளவில் விடுதிச்சாலைமாணவர்கட்கும், அதனைச்சேராத மாணவர்கட்குமிடையே காபந்தாட்டப் போட்டி நடந்து, அதில் விடுதிச்சாலை மாணவர்கட்கே வெற்றியாயிற்று. அதன்முடிவில் சிற்றுண்டிஉபசாரணை நடைபெற்றுப் பின்னர் 7-30 மணிக்கு அருளப்பெற்ற சற்பிரசாத ஆசீர்வாதத்துடன் திருநாள் இனிதே நிறைவெய்தியது.

மாணவன் ம. லாசறஸ்

---

முகாந்திரம் எவ். ஜே. ஆர். விக்கிரமசிங்கம் அவர்களின்

## தேகவியோகம்

நம்பத்திரிகையின் பிரபலஆசிரியராக நெடுங்காலம்விளங்கித் தமதுமகத்தான சமூக, சமய சேவைகள்காரணமாகப் பரிசுத்தபாப்பரசரால் அர்ச். சில்வேஸ்தரின் நைற்பட்டம் சன்மானிக்கப் பெற்றிருந்தவரான செவாலியர் வி. பிரான்சீஸ்தம்பு அவர்களின் இரண்டாவது புதல்வரான முகாந்திரம் எவ். ஜே. ஆர். விக்கிரமசிங்கம்அவர்கள் சென்ற 21-ந்திகதி செவ்வாய்க்கிழமை எதிர்பாராதவிதமாகக் காலஞ்சென்ற துயரசெய்தியறிந்து பெரிதும்மனவருந்துகின்றோம். இவரைப்பற்றிமறுமுறைவரைய எண்ணுகின்றோம்.

R. I. P.

---

— யோரான கத்தோலிக்க சரித்தாசிரியரும், தர்க்கவாதியும், தலைசிறந்த ஆங்கிலஇலக்கிய மேதாவிகளில் ஒருவருமான திரு. ஹிலேயர் பெல்லோக் அவர்களும் சென்ற வியாழக்கிழமை மரணமாயினாரென்று சமாச்சாரம் எட்டியுள்ளது. இவர் இன்னும் பதினொருதினங்களில் தமது 83-வது பிறந்தபெருநாளைக் கொண்டாடவிருந்தார்.

— அமெரிக்க ஐக்கியதேச ஜனாதிபதித்தேர்தலிலே ஜனநாயக கட்சி அபேட்சகராக முன்வந்து ஜெனறல் ஐசன் ஹாவருடன் போட்டியிட்டுத் தோல்வியுற்றவரான திரு. அட்லாய் ஸ்ரீவென்சன் தமது உலகசுற்றுப்பிரயாணத்தின்போது சமீபத்திலே வத்திக்கான்மாளிகைசென்று பாப்பரசரின் விசேஷபேட்டி பெற்றுக்கொள்ளலாயினர்.



## சதாசகாயமாதா கோணம்

### தேவதாய் எங்களுக்கும் தாய்

எங்கள் அவசியங்களிலே இந்தஉலகத்தில் ஒருஅன்புள்ள தாயைப்போல எமக்கு உதவிபுரிய வேறுயார்தான் உண்மையான ஆத்திரப்படுவார்கள்? வேறு யாரிடத்தில்தான் நம்பிக்கையுடன் நாம்போவோம்? ஒருதாயானவள் உள்ளபடி வல்லமையுள்ளவளென்றால், எங்களுக்குச் செய்யவேண்டிய உதவிஎல்லாம் செய்வாள் அல்லவா? அன்புள்ளவளென்றால், எல்லாஉதவியும்புரியத் தாராளமனதுடன் முன்வருவாள் அல்லவா? தேவதாயாருடைய வல்லமையைப்பற்றியும், எங்கள் மட்டில் அவகொண்டிருக்கும் அணைகடந்த அன்பைப்பற்றியும் எங்களிற் சந்தேகப்படுவோர் எவருமே இல்லைஎனலாம்.

தேவதாயார் எங்களுக்கும் தாய் என்பதை இரண்டு உதாரணங்களால் உணர்ந்துகொள்ளக்கூடும். தேவமாதா மங்களம்கேட்ட காட்சிஒன்று. மற்றது, சிலுவைஅடியில் நிகழ்ந்தகாட்சி. நசரேத்தென்னும் சிற்றூரிலே, மரியம்மாள்வசித்த சின்னக்குடிசையிலே கபிரிகேல்என்னும் தேவதூதன் "மங்களம் பிரசாதபூரணியே, ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பட்டவள்நீரே. உமது உதரத்திற் கருத்தரிப்பீர். ஒரு ஆண்குழந்தையைப் பெற்றெடுப்பீர். அவர் உன்னதங்களில் வசிக்கும் சருவேசுரனுடைய குமாரன். அவருடைய இராச்சியம் ஒருபோதும் முடிவடையாது" என்று வாழ்த்தி, மரியம்மாளுடைய சம்மதத்தைக் கேட்டார். "இதோ ஆண்டவருடைய அடிமையானவள், உம்முடையவார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது" என்று தமதுசம்மதத்தைத் தெரிவித்த அந்தநேரமே தேவசுதன் மனிதனாக உற்பவிக்கலாயினார். தேவனின் மாதாவென்றமகிமைப்பிரதாபத்துக்கு உயர்த்தப்பட்ட அதேசமயத்திற்றானே மரியாய் எங்களுக்கும் மாதாவாகிவிட்டா. "உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக்கடவது" என்று மரியாயி சொன்னநேரந்தொடக்கம் அவஎங்கள் தாயாயிருக்கிறா" என்று அர்ச். அஞ்செல்முஸ்என்ற வேதபாரகர் கூறுகிறார்.

எங்களை இரட்சிக்க வேண்டுமென்ற பேராசையினாற்றான் தேவனுக்குத் தாயாகவா அவசம்மதித்தா. சம்மதித்ததினால் எங்களுக்கும் தாயாகினா. இப்படி அவ சம்மதித்திராவிடில் தேவன் மானிடனாய் வந்திருக்கமாட்டார். எனவே, பாவிகளாகிய எங்கள் மட்டில் தேவதாயார் விசேஷஇரக்கங் காட்டுவா. எங்கள்பேரில் விசேஷ அன்பு கொள்ளுவா. ஆதலால் அவவிடம் பூரண நம்பிக்கையுடன்போக நாங்கள் எள்ளளவும் பின்வாங்கக் கூடாது.

மற்றச்சம்பவத்தையும் அவதானிப்போம். கல்வாரிமேட்டிலே ஆணிதைத்த கால்கரங்களுடன் இரத்தந் தோய்ந்தவராய்ச் சிலுவைமரத்தில் யேசுநாதர் தொங்குகிறார். அவ்வேளையிலே, நிஷ்டூரமான பாடுகளின் நடுவிலே யேசுநாதர் தமதுதிருத்தாயாரை நோக்கி, அருளப்பரைக் காண்பித்து: "இதோ உன்மகன்" என்கிறார். அருளப்பரைநோக்கி: மாதாவைக் காண்பித்து: "இதோ உன் தாய்" என்கிறார். அதேசமயத்தில் நாங்களும் மாதாவுடைய மக்களானோம். இது வழுவாவரமுள்ள திருச்சபையின் வியாக்கியானம். சிலுவை அடியில் நாம்எல்லோரும் மாதாவின் பிள்ளைகள் ஆனோம். ஏராளமான கண்ணீர்களின்மத்தியில் அவ எங்களைப் பெற்றெடுத்தா. இவ்வளவு கண்ணீருக்கு இலக்கான மக்களை அத்திருத்தாயார் ஒருபோதும் கைவிடமாட்டா.

இந்தநல்லதாயிடம் நம்பிக்கையுடன் நாம்போகலாம். எங்கள் இருதயங்களைத்தட்டி அருட்டிவிடுமபடி இரந்து மன்றாடலாம். எங்களுக்குவேண்டிய சகலவரப்பிரசாதங்களையும், இகத்துக்கும் பரத்துக்கும்வேண்டிய சகலநன்மைகளையுங் கேட்கலாம். வரப்பிரசாதங்களின் பொக்கிஷசாலைக்கு எமது பரலோக அரசி—சதாசகாயமாதா— எங்கள் அன்பான தாயார்தான் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறா என்பதை மறந்துபோகாது, அவவிடம் செல்ல ஆத்திரப்படுவோமாக. அந்த நல்ல தாயார் நமக்கு நலமெனக்காணும் எதையும்தர மறுக்கமாட்டா. மறுக்கத் தாய்உள்ளம் இடமும்தராது.

பெரியகட்டு
புனித அந்தோனியார் பேரில்

## புகழ்மாலை

1

மதிமிதித் தொளிருந் தேவ
மாமரி யிணைத்தாள் வேண்டிக்
குதிகுதித் தெழுந்து பாயுங்
குரவை வாழ் மயிலைகட்கு
விதிமதித் தறியும் ஞான
விளக்கத்தை யழைத்துச் சொன்ன
துதிகதித் துயர்ந்த சந்தந்
தோனிபா மாலை சொல்வாம்.

2

மகரந்தம் அளைந்து செந்தேன்
மதுகரம் நுகர்ந்து பாடும்
சுககந்தங் கமழுஞ் சந்தச்
சோலைசூழ் பெரிய கட்டின்
சிகரம்நீள் வானை முட்டும்
சேதிமத் திருந்து தாய்போல்
பகர்சந்தந் தோனி யாரே
பட்சம் வைத் தாளுவீரே!

3

சிந்துநீர் சுழித்துப் பாயுந்
திரைசுருட் டிடை வாய்ப்பட்டு
மைந்தனங் கொருவன் வீழ்ந்து
மாண்டிட அவன்றன் றாதை
சிந்தையி னழுது வேண்டச்
சிறுவன்மீண் டுயிர்க்கச் செய்த
தந்தையந் தோனி யாரே
தஞ்சந்தந் தெம்மை யாள்வீர்!

4

தாய்தனை உதைத்த காலைத்
தனயனுந் தறிக்கக் கண்டு
ஆயினி யென்செய் வேனென்
றழுதவன் தாயும் வேண்டப்
போயுடன் சிறுவன் பாதம்
பொருந்தவற் புதஞ்செய் திட்ட
தூயவந் தோனி யாரே!
துயர்களைந் தாட்கொள் வீரே!

(வேறு)

சந்தவந் தோனி யென்னுந்
தவமுனி நாமந் தன்னைச்
சிந்தையி லுன்னும் போது
சினந்தெழு கடியின் வஞ்சப்
பந்தமும் நீங்கும் ஞானப்
பண்பொளி செழிக்குஞ் செல்வம்
சந்ததம் பெருகும் ஆதி
தற்பரன் தயையு முண்டாம்.

[அடுத்துநிகழும் ஆவணிமாதம் 2-ந் திகதி அர்ச். அந்தோனியாரின்திருநாள் பெரியகட்டில் கொண்டாடப்படவிருப்பதைமுன்னிட்டுக் க. மரிசால்பிள்ளைப் புலவரால் இவைகள்பாடப்பெற்றன.]

---

— யுத்தக் கப்பல்களிலே அணுச்சக்திப்பீரங்கிகளை அமைக்கும் வேலையில் பிரித்தானிய கடற்படை விஞ்ஞானிகள் ஈடுபட்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இந்தப் பீரங்கிகள் கொண்டு இருபதுமைல்தூரத்துக் கப்பால் குண்டுகளைச் செலுத்தவேண்டுமென்பதே அவர்களின்நோக்கமாகும்.



# பாலர்  பக்கம்



## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

இன்று "பாலர் பக்க"த்திலே மூன்று படங்களை நீங்கள் பார்த்ததும் ஆனந்த பரவசம் கொள்வீர்கள். அவற்றின் மத்தியிலே நடுநாயகமாய் உங்கள் அன்பர் சின்ன யேசு மகிமையுடன் காட்சி அளிக்கின்றார். அவர் தமது இடது கரத்தில் பந்து போன்ற ஓர்பொருளைத் தாங்கி நிற்கின்றார். அதன்மேல் சிறிய சிலுவை ஒன்று காணப்படுகின்றது. வலது கரத்தால் எதனையோ காண்பிக்கின்றார். அவர் இடது கரத்தில் ஏந்தியிருப்பது என்ன? வலது கரத்தால் சுட்டிக் காண்பிப்பது என்ன? இவற்றின் கருத்துகள் என்ன?

சின்ன யேசுவின் வலது பக்கமாக ஒருதம்பி போர் வீரனைப் போல் உடை தரித்துத் துப்பாக்கி ஒன்றுடன் ஓர் காவல் படை வீரனைப் போல் நிற்கின்றான். அவரின் இடது பக்கமாக ஒரு தங்கைச்சி அழகாக உடை அணிந்து தன்னுடைய கைகள் இரண்டையும் பின்புறமாகக் கட்டிக்கொண்டு அவரைப் பார்த்த வண்ணம் நிற்கின்றாள். இவர்கள் இருவரும் உங்கள் மனதில் உண்டு பண்ணும் உணர்ச்சிகள் எவை?

இவைகளை எல்லாம் நன்றாய் ஆராய்ந்து சிறந்த விடைகள் அமைத்து ஓர்சிறிய கட்டுரை எழுதி அனுப்ப உங்களால் முடியுமா? முடியுமானால் சரி, எழுதி அனுப்புங்கள் பார்ப்போம். முதற் தரமான மூன்று விடைகளும் "பாலர் பக்க"த்தில் வெளிவரும்.

## ஒளி வீசுவோம்

— I —

தீபம்போல் ஒளி வீசுவோம் — சின்ன
சேசுவே களி கூரவே
பாவமாம் இருள் சாகவே — சிறு
பாலர்நாம் ஒளி வீசுவோம்.

— II —

வாழ்விலே ஒளி வீசுவோம் — பிறர்
வாழவே ஒளி வீசுவோம்
நாளுமே ஒளி வீசுவோம் — பல
நன்மைசெய் தொளி வீசுவோம்.

— III —

எங்குமே ஒளி வீசுவோம் — எம்
இதய தூயொளி வீசுவோம்
தங்கமாய் ஒளி வீசுவோம் — சேசு
தாழ்பணிந் தொளி வீசுவோம்.

— IV —

அன்பினால் ஒளி வீசுவோம் — நல்
அமைதியால் ஒளி வீசுவோம்
துன்பமாம் இருள் நீங்கவே — நாம்
தூய்மையாம் ஒளி வீசுவோம்.

'ஜெயம்'

## என்னைத் தெரியுமா?

1. நான் ஒரு பெரிய பாவியாய் இருந்தேன். நான் அதிகம் நேசித்தபடியால் யேசு என்னை மன்னித்தார். சிலுவையடியில் கன்னிமரியம்மாளுடனும், அருளப்பருடனும் நானும் நின்றேன். பெயரென்ன?

2. அசிசிப்பதியரான அர்ச். பிரான்சிஸ்குவின் சிஷன்நான். நான் யேசுவை நன்றாய் நேசித்தபடியால் கிராமங்கள், பட்டணங்களுக்குச் சென்று அவர் திருநாமத்தின்மேல் பக்தியைப் பரப்பினேன். நான்யார்?

3. சருவேசுரன் உம்மைத் தமது குமாரனின் தாயாகத் தெரிந்துகொண்டாரென்று நான் கன்னிமரியாய்க்கு அறிவித்தேன். அவரை "மரியாயே வாழ்க!" என்று நான்தான் முதல் வாழ்த்தினேன். நான்யார்? என்னுடைய திருநாள் எப்போது?

4. என் குடும்பத்தில் கடைக்குட்டிப்பிள்ளை நான். மிகவும் இளம்வயதில் கார்மேல் சபையிற் சேர்ந்து, சிறு கடமைகளையும் திறமையாகச் செய்து பெரிய அர்ச்சியசிட்டவளானேன். நான்யாரென்று சொல்லுங்கள்.

விடை:

1. அர்ச். மரியமதலேனாள்.
2. சீயென்னாவின் அர்ச். வேர்னாடைன்.
3. அர்ச். கபிரியேல்—பங்குனி 24.
4. அர்ச். சின்னமலர்.

## அளவைகள்

தானியம் அளப்பது படி—நிறையை அளப்பது தாசு—தூரத்தைச் சொல்வது மைல்—வேகத்தைச் சொல்வது நேரம்—வெப்பத்தை அளப்பது உயரம்—வினவைச் சொல்வது போகம்—நம்பிக்கையை அளப்பது நாணயம்—செயலை அளப்பது சிந்தனை—குணத்தைச் சொல்வது குலம்—குடும்பத்தை அளப்பது குழந்தைகள்.

ச. இருதய ஆனந்தன்,
க. ஆ. ஆண்பாடசாலை, மன்னார்.

## நீங்கள் அறிவீர்களா?

### மிகப்பெரியது

1. உலகில் மிகப்பெரிய ஆலயம்—ரோமாபுரியில் உள்ள அர்ச். பேதுரு வானவர் ஆலயம்.

2. உலகில் மிகப்பெரிய மாளிகை—ரோமாபுரியில் உள்ள வத்திக்கான் மாளிகை.

3. உலகில் மிகப்பெரிய கட்டடம்—சிக்காகோநகரில் உள்ள "மேர்ச்சன் டிஸ் மாட்" என்ற வியாபாரப்பொருள் சந்தைக்கட்டடம். 40 லட்சம் சதுர அடி விஸ்தீரணம் உடையது.

4. உலகில் மிகப்பெரிய மணி—மஸ்கோ நகரில் உள்ள "ஸிஸார் கொலக்கோப்" என்ற மணி. 180 தொன் நிறை உடையது.

5. உலகில் மிகப்பெரிய ஹோட்டல்—சிக்காகோ நகரில் உள்ள ஸ்ரீவென்ஸ் ஹோட்டல். 2,000 அறைகளை உடையது.

6. உலகில் மிகப்பெரிய நூல்நிலையம்—பிரித்தானிய மியூசியம். 40 லட்சம் புத்தகங்களைக் கொண்டது.

7. உலகில் மிகப்பெரிய வனந்தரம்—சகாரா வனந்தரம். 80 லட்சம்சதுர மைல் விஸ்தீரணம் உடையது.

### மிக உயர்ந்தது

1. உலகில் மிகஉயர்ந்த கட்டடம்—நியூயோக் நகரில் உள்ள "எம்பயர் ஸ்ரேற்" என்றகட்டடம். 1,248 அடி உயரம் உடையது.

2. உலகில் மிகஉயர்ந்த ஆசனக்கோவில் கோபுரம்—ஜேர்மனியிலே உல்ம் நகர் ஆசனக்கோவிலின் கோபுரம் 532 அடி உயரம் உடையது.

3. உலகில் மிகஉயர்ந்த மலைச்சிகரம்—இமய மலையில் உள்ள எவறெஸ்ற் சிகரம். 29,002 அடி உயரம் உடையது.

4. உலகில் மிகஉயர்ந்த பட்டணம்—பொலிவியா நாட்டில் உள்ள லாப்பெஸ் நகர். கடல் மட்டத்துக்கு மேல் 11,800 அடி உயரத்தில் உள்ளது.

### மிக நீண்டது

1. உலகில் மிகநீண்ட றெயில்வே மேடை (பிளாற்போம்)—இந்தியாவிலே சொனெப்பூர் எனும் இடத்தில் உள்ளது. 805 யார் நீளம் உடையது.

2. இருஇடங்களை இணைக்கும் மிக நீண்டபாலம்—சான் பிரான்சிஸ்கோ நகரையும், ஒக்லன்ட் நகரையும் இணைப்பது. எட்டேகால் மைல் நீளம் உடையது.

3. கப்பல் செல்லும் மிகநீண்ட கால்வாய்—சுவீடனில் உள்ள கோட்டா கால்வாய். 115 மைல் நீளம் உடையது.

4. மிகநீண்ட மதில்—சீனுவின்பெரிய மதில். ஆயிரம்மைல் நீளம் உடையது.

5. மிகநீண்டநதி—தென் அமெரிக்காவிலே பிறேசில் நாட்டின் ஊடாகப் பாயும் அமேசன் நதி. நாலாயிரம் மைல் நீளம் உடையது.

'போன்'

## நாயும் ஓநாயும்

ஒருநாள் ஓநாய் ஒன்று வீதிவழியே போய்க்கொண்டிருந்தது. அதன் உடல் மிகமெலிந்து இருந்தது. அதற்குப் பசி தாங்க முடியவில்லை. எங்கும் அலைந்தும் ஒன்றும் அகப்படவில்லை. அப்போது அவ்வழியாக ஒரு பெரிய நாய் வந்தது. இரண்டும் ஒன்றை ஒன்று சந்தித்தன.

நாய்—(ஓநாயைப் பார்த்து) "ஓநாயே! நீ மிகவும் மெலிந்து இருக்கிறாயே; உனக்குச் சாப்பாடு கிடைப்பதில்லையா?

ஓநாய்—நான்பகல்முழுவதும் சுற்றி அலைந்தும் எங்கும் ஆகாரம் கிடைக்கவில்லை. நீமட்டும் நன்றாய்க் கொழுத்து இருக்கிறாயே; எங்குசாப்பிடுகிறாய்?

நாய்—நான் ஒருவீட்டைக் காவல் செய்து வருகிறேன்; வீட்டுக்காரர் எனக்கு வேண்டிய சாப்பாடு போடுகிறார்கள்; வயிறாரச் சாப்பிட்டு விட்டுச் சந்தோஷமாக இருக்கிறேன்.

ஓநாய்—அப்படியானால், எனக்கும் அங்கு சாப்பாடு கிடைக்குமா?

நாய்—நன்றாய்க் கிடைக்கும். சரி, என்னுடன் வாவென்று கூறி ஓநாயை அழைத்துச் சென்றது.

போகும் வழியிலே ஓநாய் நாயை உற்றுக் கவனித்தது. அதன் கழுத்தில் தோல்பட்டி ஒன்று இருந்ததைக் கண்டுவிட்டு: "நாயே, உனது கழுத்தில் இருப்பது என்ன"? என்று கேட்டது. அதற்குநாய், பகல் வேளையில் என்னைக் கட்டிவைக்கும் பட்டி இது; இராவேளையில் மட்டும் நான் இஷ்டம்போல் உலாவித்திரிவேன்; வீட்டையும் பார்த்துக் கொள்வேன் என்றது.

அப்படியானால் நான் உன்னுடன் வரவில்லை; எனக்கு அடிமைவாழ்வு பிடிக்காது; பட்டினி கிடந்தாலும் சுதந்திரமாக வாழவே ஆசைப்படுகிறேன் என்று சொல்லிவிட்டு ஓநாய் ஓட்டம் பிடித்தது.

ச. இருதயஆனந்தன் கூஞ்ஞ
க. ஆ. ஆண்பாடசாலை, மன்னார்.


## கமக்காரனும் மகனும்

ஒருநாள் ஒருகமக்காரன் சில கூலியாட்களுடன் தன்மகனை அழைத்து, "மகனே, நீ இன்று இவர்களுடன் சென்று எங்கள் வயலை உழுதுவிட்டு வா" என்று சொல்லி அனுப்பினன். மகனோ கூலியாட்களைப்போல் இருமடங்குவேலை பாடுபட்டுச் செய்தான். உழவு முடிந்ததும் தகப்பன் வந்து பார்த்துவிட்டுக் கூலியாட்களுக்குக் கூலியைக் கொடுத்து அனுப்பினன். தன் மகனுக்கு ஒரு கூலியும் கொடுக்கவில்லை. அம்மட்டோ! உழுவிலே செய்த சிலதவறுகளுக்காக அவனைக் கடிந்து கொண்டான். காரணம் என்ன? கூலியாட்கள் அந்நியர். அவர்களுடைய கூலியைக் கொடுக்க வேண்டும். அவன் மகனே வயலுக்கு உரியவன். அவனுக்குக் கூலி கொடுக்க வேண்டியதில்லை. ஆனால், அவன் இன்னும் திருந்த வேண்டும். ஒரு பிழையும்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

பாலர் பக்கத் தொடர்ச்சி

# எமாந்த தாத்தா



பிள்ளைகளே! இங்கு நான்கு படங்கள் இருக்கின்றன. அவற்றிலே முதலாம் படத்தைக் கவனித்துப் பாருங்கள். கதவின் மறைவிலே ஒரு தாத்தா பதுங்கி இருக்கிறார். அவர் தமது வீட்டில் எவ்வளவோ தொல்லைகளைச் சகித்துக் கொண்டு காலங் கழிக்கிறார். ஆனால், எலித் தொல்லையைச் சகிக்க அவரால் முடியவில்லை. எத்தனையோ பூனைகளை வளர்த்துப் பார்த்தார். பூனைகள் எலிகளைப் பிடித்த காலந்தான் மலையேறி விட்டதே. பொறிவைத்துப் பிடிப்பதில் ஒரு பரீட்சை நடத்துவோம் என்று ஒருநாள் திட்டம் போட்டார். அனுபவ சாலியான தாத்தா போட்ட திட்டமும் அவம் போகுமா? கைமேல் பலனைக் கண்டு விட்டார். பொறியில் அகப்பட்டு விட்டது ஒருஎலி. எலி பிடிப்பதில் தான் ஒருபுலி என்று அவருக்கு ஒரேபெருமை.

இரண்டாம் படத்தைப் பாருங்கள். "உண்மை நண்பனை ஆபத்து வேளையில்தான் தெரியும்" என்று சொல்வார்கள் அல்லவா? அதைப்போலப் பொறியில் அகப்பட்ட எலியைத் தேடி இன்னொரு எலி தன்உயிரையும் மதியாது கூண்டின் அண்டை வந்து விட்டது. தாத்தா அதைக் கண்டு விட்டார். அவருக்கு ஒரே ஆனந்தம். எப்படியும் அந்த எலியையும் கொன்று விட வேண்டும் என்று ஆத்திரப் பட்டார். தன் வழுக்கைத் தலைக்குமேல் ஒரு வளைந்த பொல்லை உயர்த்திக் குறிபார்த்தார்.

இனி மூன்றுவது படத்தைக் கவனியுங்கள். ஆத்திர காரனுக்குப் புத்தி மட்டு என்பார்களே. அதுபோல நடந்து விட்டது காரியம். "ஆனையும் அறுகம் புல்லில் தடக்குமாம்." அனுபவ சாலியான தாத்தாவின் குறி தவறியதில் ஆச்சரியம் என்ன? பொல்லு குறிதவறிப் பொறிக்கதவின் பூட்டிலே விழுந்தது. பொறியின் கதவும் திறந்தது. இரண்டு எலிகளும் தலைதெறிக்க ஓடின. தாத்தாவுக்கு ஆத்திரமோ தாங்க முடியவில்லை.

நாலாம் படத்தைப் பாருங்கள். பொறியில் இருந்த எலியையும் இழந்து, வெளியில் இருந்த எலியையும் கைவிட்டு ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் ஒரு தனி முட்டாளாகக் காட்சி அளிக்கிறார் தாத்தா. நல்ல காலம், தாத்தாவின் பொல்லாவது முறிந்து போகாமல் தப்பியது. சுபம்!

## கமக்காரனும் மகனும்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றித் தனது வேலையைச் செய்ய வேண்டும். அதற்காகவே அவனைக் கண்டித்தான். இவ்விதமே சர்வேசுரனும் மோட்ச காணிக்கு உரியவர்களான தமது பிள்ளைகள் செய்யும் சிறு குற்றங்களுக்குத்தன்னும் அவர்களைக் கண்டித்துநடப்பிக்கிறார். ஆனால், சிலர் நாங்கள் "ஆண்டவரே, ஆண்டவரே" என்று அவரை எப்போதும் நேசிக்க நேசிக்க, அவர் மேலும் மேலும் தரித்திரத்தையும், துன்பத்தையுமே எங்களுக்கு அனுப்புகிறார்; பூசை என்றால் என்ன? என்று தானும் தெரியாதவர்களைப் பாருங்கள்; எவ்வளவு சந்தோஷமாயும், செல்வமாயும் வாழ்கின்றனர்; நாங்களும் அப்படி இருந்தாலென்ன? என்று சொல்வது உண்டு. ஆனால், இவர்கள் ஒருநாள் அடையப் போகும் மறுமைப் பாக்கியம் என்ன என்று உணர்வார்களேயானால் தங்களின் கஷ்ட, துன்பவேளைகளில் அதிக சந்தோஷமாயும், மன உற்சாகமாயும் இருப்பார்கள்.

—ஆசிரியமாணவி

## ஆச்சரியப்படுவீர்கள்

ஓர் ஊரில் ஒரு ஏழைப் பையன் இருந்தான். அவன் சிறுவனாய் இருக்கும்போதே தாய், தந்தையரை இழந்து விட்டான். அதனால் அவன் பிச்சை எடுத்து வயிறு வளர்க்க நேர்ந்தது. பிச்சை எடுப்பது இழிவுஎன்று அவன் கருதினான். ஆனால், வறுமை அவனை அவ்வாறு செய்யத் தூண்டியது. அவன் பிச்சை கேட்கும் ஆட்கள் மனம் இரங்கி அவனுக்குப் பிச்சை போட்டனர். தினமும் பிச்சை போதிய மட்டும் கிடைத்ததால் அவன் அதைக் கொண்டு அன்றாட பொழுதைப் போக்கி வந்தான்.

ஒருநாள் ஒருபெரியவர் அவனுக்குப் பிச்சை கொடுத்து விட்டு: "தம்பி, உன்னைப் பார்க்கும் பொழுது ஓர் புத்தியுள்ள அழகிய சிறுவனாகத் தோன்றுகிறாயே; நீ ஏன் வேறு ஒரு மதிப்பான தொழில் செய்து பிழைக்கக் கூடாது" என்றார். அன்றுமுதல் அப்பையனை அது உறுத்தத் தொடங்கியது. ஏன் நான் இந்த இழிவான தொழிலைச் செய்யவேண்டும்? வேறு ஒரு தொ

## ஸ்ரீ பி. ஆபேற்பிள்ளை அவர்களின்
# தேகவியோகம்

அச்சுவேலியிலே காலங்கண்ட ஓர் மனிதராய், பலராலும் நன்குமதிக்கப் பெற்றவராய், அருங்குண சீலராய் விளங்கியிருந்த ஸ்ரீ பி. ஆபேற்பிள்ளை உபாத்தியாயர் பாரிசவாதங்கண்டிருந்து, அந்தியதேவதிரவிய அனுமானங்களைப்பெற்றுச் சென்ற 11-7-53 வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் புடைசூழ்ந்து செபமாலை செபித்துநிற்க, அமைதியாக மரணநித்திரையாயினர். இவர் ஏழாலையைச்சேர்ந்த சூராவத்தையிலே தக்கவோர் சைவக்குடும்பத்தில் பிறந்தவர். கொழும்புத்துறைச் சஞ்சூசையப்பர் சாதனா, போதனாகழகங்களிலே கல்விபயின்று ஓர் ஆசிரியராகவெளிகொண்டு 40 ஆண்டுகளாகச் சீரியமுறையில் ஆசிரியத்தொண்டாற்றி வந்து, 1935-ம் ஆண்டு இளைப்பாறியவர். பிறராத்துமஇரட்சணிய ஆவல் கொண்ட இவரது முயற்சியாலும், நன்முன்மாதிரிகையாலும் இவரின் ஜனனபதியிலும், பிறவிடங்களிலும் கத்தோலிக்கசமயத்தைத் தழுவிக் கொண்ட குடும்பங்களாய் இன்று அறுபதுக்கு மேல் இருக்கின்றன.

இவர் கிராமச்சங்கத்தில் பத்துவருடகாலம் ஓர் அங்கத்தவராயிருந்து பொதுசன நலன்களுக்காக உழைத்துவந்தவர். இவருக்கு மூன்று புத்திரரும், மூன்றுபுத்திரிகளும் உண்டு. கொட்டகப்புலம், தலைமைஆசிரியர் ஏ. ஆர். மனுவேற்பிள்ளை, திரு. ஏ. பி. தம்பிராசா, லேக்ஹவுஸ்லிகிதர் பி. ஏ. பிரகாசம் ஆதியமூவரும் இவரின்புதல்வர்கள். திருமதி வி. குணரட்ணம், திருமதி எஸ். எம். யோசேப், திருமதி ஏ. தம்பிராசா ஆதியமூவரும் புத்திரிகளாவர். மரிக்கும்போது இவருக்கு வயது 77.

மறுநாள் சனிக்கிழமை பலவிடங்களிலுமிருந்து பெருந்திரளாக வந்து கூடிய இனசனர், சிநேகிதர் முதலானோர் மத்தியில் இவர் பிரேதமானது இருவெண்பரிகள் பூட்டிய இரதமீது அழகானபேழையில் வைத்துக் கட்டளைக்குரவர் வண. ஜோண் சிங்கராயர் சுவாமியவர்கள் துக்கசங்கீதம்பாடிச்செல்லக் கோயில்கொண்டு சென்று தோலகட்டி ஆச்சிரம தலைவர் வண. பி. ஏ. தோமஸ்சுவாமியவர்களால் ஆசீர்வதிக்கப்பெற்றபின் சேமக்காலையிலும் சுவாமியவர்களே கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்க அடக்கஞ் சிறப்பாகநடந்தேறியது.

R. I. P.

— யப்பானிய சுப்பிறீங் கோட்டுப் பிரதமநீதியரசரின் பாரியாரான ஸ்ரீமதி கோட்ராரோ ரனகா அவர்கள் ரோக்கியோ நகரிலே பிள்ளைகளுக்கென்று சித்திர விளக்கங்களுடன் கூடிய மாதாந்த புதியசஞ்சிகைஒன்றின் ஆசிரியையாக இருக்கின்றார். கத்தோலிக்காக்கென்றே இது வெளிவராத போதிலும் கத்தோலிக்க கொள்கைகளையும் மறைமுகமாக இது எடுத்துக்காட்டுவதாகும். இவரும், இவர் நாயகரும் புறெட்டஸ்தாந்தராயிருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்கரானவர்கள்.

ழிலை ஏன் செய்யக்கூடாது? என்று கருதினான்.

அன்று முதல் பிச்சை எடுப்பதை நிறுத்தி விட்டான். பின் சாமான் தூக்கும் கூலியாக அமர்ந்தான். அதில் சேகரித்த பணத்தைக்கொண்டு ஒரு மாடும், வண்டியும் வாங்கினான். அப்படியே சிறுகச் சிறுகத் தனதுமுயற்சியால் இன்று ஓர் சொந்தக் கடை வைத்துப் பெரும் வியாபாரம் நடத்துகிறான் என்றால் நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள்தானே.

ச. இருதயஆனந்தன்—மன்னார்

# வெள்ளியூபிலி விழா

புங்குடுதீவு, அர்ச். சவேரியார் கோவில் சக்கிறிஸ்தாமாகிய திரு. கபிரியேல் தாவீது என்பவர் சக்கிறிஸ்தாமாக நியமனம்பெற்ற 25-வது வருட வெள்ளியூபிலிவிழா 19-7-53 ஞாயிறன்று காலை திரளானமக்கள் கூடியிருந்தசமூகத்திலே திரு இருதயக் கூட்டத்தினரின் சீரிய முயற்சியால் கட்டளைக்குரவர்தலைமையில விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மேற்றிராணியாண்டவரின் திருக்கரத்தால் ஆசீர்வதிக்கப்பெற்ற ஓர்மெடல் அவ்வேளை கட்டளைக்குரவரால் அவருக்குச் சங்மானிக்கப்பட்டு அதன்மேல் பாடற்பூசை நிறைவேறியது. பூசையின்பின் புகைப்படம் பிடிக்கப்பட்டபின் திரு. அலஸ்குருசுமுத்து விழா நாயகருக்கு மாலைசூட்டினார். அதன்மேல் அவர் அனைவரும்புடைசூழப் பாடசாலைமண்டபத்திற்கு அழைத்துக் கொண்டு போகப்பட்டனர். யேசுமலர், மாகிறேற்என்னும் சிறுமிகளால் குரவர்க்கும், அவர்க்கும் பூமாலைகள் சூட்டப்பட்டன. மாணவன் மரியலேயோன் வாழ்த்துப்பாபாடினார். திரு. பிரான்சீஸ் சவிரிமுத்து வாழ்த்துப்பத்திரம் படித்துக்கொடுத்தார். தங்க மோதிரம்ஒன்றும், வெள்ளிச் செபமாலைஒன்றும் மக்களின் அன்பளிப்பாகக் குரவரால்ஆசீர்வதித்து வழங்கப்பட்டன. திரு. ம. பிரான்சீஸ், திரு. பிரான்சிஸ்சேவியர்ஆசிரியர் எனுமிருவரும் பேசியபோது: சக்கிறிஸ்தாமின்தொண்டைப் புகழ்ந்துபாராட்டி, அவர் இன்னும்பலவருடகாலம் அதனைத் தொடர்ந்துசெய்ய அருள் பாலிக்குமாறு இறைவனைப் பிரார்த்தித்துநின்றனர். மீன்பிடிசங்கத் தலைவரும், திருஇருதயக்கூட்டக் காரியதரிசியும், மத்திய கிராமமுன்னேற்றசங்க அங்கத்தவருமாகிய திரு. ச. அ. மனுவேற்பிள்ளை நன்றியுரை கூறினார். கட்டளைக்குரவரும் சக்கிறிஸ்தாமின் தொண்டைப்பாராட்டி அவரை ஆசீர்வதித்தார். கடைசியாக விழாநாயகர் குரவர்க்கும், சபையோர்க்கும் வணக்கம்கூறித் தமதுநன்றியைத் தெரிவித்தனர். பின்னர் நடனம், கோலாட்டம், சங்கீதவிழா ஆகியன நடைபெற்று முடிவிலே கட்டளைக்குரவர் ஆசீர்வாதம்அருள, சிற்றுண்டிஉபசாரணையுடன் யூபிலிவிழா இனிதேநிறைவேறியது.

— நிருபர்

## அர்ச். பிரான்சீஸ்குவின்
# மூன்றாஞ் சபை

அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்றாஞ் சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 31-ந் தேதி வெள்ளிக்கிழமை பி. ப. 5 மணிக்கு அர்ச். சூசையப்பர்சிற்றாலயத்தில் நடந்தேறும். அவ்வமயம் நாலு சகோதரர்கள் நிலையந்தஸ்தில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். ஆவணிமாதத்தில் பரிபூரணபலன்கள் அடையக்கூடிய நாட்கள்:— 2, 4, 7, 12, 15, 16, 18, 19, 22, 25, 26. பொதுப்பாவமன்னிப்பு அடையக் கூடிய நாட்கள்:— 12, 15, 22, 25. ஆவணி 12-ம் 25-ம் தேதிகள் முறையே எமது சபைப்பாதுகாவலர்களான அர்ச். கிளேயருடையவும், அர்ச். லூவிஸ்இராசாவுடையவும் திருநாட்கள். ஆகையால் அந்நாட்களில் சகோதரர்கள் திவ்வியபூசைகண்டு திருவிருந்தருந்துவார்களாக. ஆவணி மாதம் 2-ம் தேதியில் அடையக்கூடிய போஷியுங்குலாப்பலன்களை அந்நாளில் அல்லது வண. கட்டளைக்குரவரால் நியமிக்கப்படும்நாளில் அடையலாம்.

A. S. FRANCIS OF MARY
for Director

## சம்பத்திரிசியார்கல்லூரிக்கழக விளையாட்டுப்போட்டி

சம்பத்திரிசியார்கல்லூரிக் கழகவிளையாட்டுப்போட்டி கடந்த 18-ந் திகதி சனிக்கிழமையன்று கைத்தொழில்—கடற்தொழில் மந்திரியார் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்அவர்கள் தலைமையிலே சிறப்பாக நடைபெறலாயிற்று. அவ்வேளை விளையாட்டு மைதானத்தைச் சூழவரப் பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தார்கள். அவ்வமயம் பலவித ஓட்டப்பந்தயங்களும், பாய்ச்சற் பந்தயங்களும் நடைபெறலாயின. ஒருமைல்ஓட்டமும், அரைமைல் ஓட்டமும், 220 யார்ஓட்டமும் மிகவும் குறுகியநேரத்தில் ஓடிமுடிக்கப்பட்டன. பின்னர் நூல்கோக்கும் பந்தயமும், சமுகமளித்தோரின் ஓட்டப்பந்தயமும், சங்கீதக்கதிரையும் நடந்தேறின. கண்டோர்மனதை அதிகம்கவர்ச்செய்தது. கடைசியாகநடந்த கயிற்றிழுவைப் பந்தையமாகும். முதலாவது கயிற்றிழுவைப்பந்தையம் டன் கழகத்துக்கும், ஏபிரகாம்கழகத்துக்குமிடையே நடைபெற்றது. இதில் டன்கழகம் இரண்டு இழுவைகளால் வெற்றிபெற்றது. பின்னர் கல்லூரிமாணவர்களுக்கும், சமுகமளித்தவர்களுக்குமிடையே நடந்த கயிற்றிழுவையில் கல்லூரி மாணவர்களே வெற்றிபெற்றனர். இதுமுடிந்தவுடன் கல்லூரிஅதிபர் சிறு சொற்பொழிவாற்றிப் போட்டியில் பங்குபற்றியவர்களுக்கும், சமுகமளித்தவர்களுக்கும், உதவிபுரிந்தவர்களுக்கும் நன்றித்திகூறிமுடித்தார். பின்னர் மந்திரியார் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினர். பொஞ்ஜின்கழகம் 116 புள்ளிகளைப் பெற்று முதலாவதுஸ்தானமும், டன் கழகம் 108 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது ஸ்தானமும், மத்தியூஸ் கழகம் 84 புள்ளிகளைப்பெற்று மூன்றுவது ஸ்தானமும், ஏபிரகாம் கழகம் 42 புள்ளிகளைப்பெற்று நான்காவது ஸ்தானமும் வகித்தன.

## தமிழ் வள்ளல் வேதநாயகம்பிள்ளை நினைவு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வசமய சமரசக்கீர்த்தனை மிகவும் மேலான கீர்த்தனைநூல். எச்சமயத்தவர்களும் படித்துப் பயனடையக்கூடியது. பெண்மதிமாலை, பெண்களுக்குப் புத்திபுகட்டுவதாயுள்ள மிக அருமையான நூல். சித்தாந்தசங்கிரகம் என்பது ஒருசட்டநூல்.

கத்தோலிக்க சமயச்சார்பில் வேதநாயகர் எழுதியநூல்கள் எம்மால் பொன்னேபோற் போற்றப்படவேண்டிய அவ்வளவு திவ்வியமானவை. இப்படியாக, செய்யுளிலும், வசனத்திலும் அநேகஅரிய நூல்களைஇயற்றித் தமிழுக்கு அதிகசேவைசெய்து, மங்காத கீர்த்தியுடன் வாழ்ந்துவந்த வேதநாயகம்பிள்ளைஅவர்கள். 1889-ம் ஆண்டு ஆடிமாதம் 21-ந் திகதி காலமானர். இவரதுமரணத்தை அறிந்து, பிரபல தமிழ்ப்பெரியோரெல்லாம் வருத்தமுற்றுப் பலபாடல்களைப் பாடியுள்ளனர். மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளைஅவர்கள் வேதநாயகர்மீது "குளத்தூர்கோவை" என்றொரு பிரபந்தத்தைப் பாடியுள்ளார். பின்வரும் கவி வேதநாயகம்பிள்ளையின் சிறப்பை எடுத்துக்காட்டும்.

"கனியிற் பொலிபொழில்
சூழ்குளத் தூரன் கரிசறுத்த
வனியிற் பொலியும் புகழ்வேத
நாயக வள்ளலநட்பு
நுனியிற் கரும்பு தினல்போல்
இனிக்கும் நுவலறிய
பனியிற் பொலிபிறை போல்வளா
ராநிறகும் பான்மதியே"

## Order Absolute in the First Instance

IN THE DISTRICT COURT OF JAFFNA.

Testamentary Jurisdiction } No. 1631

In the matter of the Estate of the late Anna Maria Chellappah widow of Karthigesu Mariampillai Chellappah of Jaffna Town. Deceased.

Edwin Aloysius Mariampillai of Jaffna Town. Petitioner.

This matter coming on for disposal before Spencer Rajaratnam Esquire, District Judge, Jaffna, on the 2nd day of July 1952 in the presence of Mr. Vital A. Moses, Proctor, on the part of the Petitioner and the affidavit of the abovementioned Petitioner dated 2nd July, 1953 and the affidavit of the witnesses who signed the Last Will and Testament No. 1099 dated 3rd May 1952 attested by Vital A. Moses, Notary Public and the Notary who attested the said Last Will having been read.

It is ordered that the Will of Anna Maria Chellappah widow of Karthigesu Mariampillai Chellappah deceased dated 3rd May 1952 and attested by Vital A. Moses, Notary Public, under No. 1099 be and the same is hereby declared proved and Edwin Aloysius Mariampillai the Petitioner is the Executor named in the said Will and that he is entitled to have Probate of the same issued to him accordingly.

This 2nd day of July, 1953.

(Sgd.) A. SAMBANDAR,
District Judge.

Drawn by :
Sgd. Vital A. Moses,
Proctor for Petitioner.

## சுகாதார விழா

சென்றசனிக்கிழமை நடைபெற்ற வடமராட்சிப்பகுதிச் சுகாதாரவிழாவின் இயலிசை நாடகப்போட்டியிலே இப்பகுதிப்பாடசாலைகள்பல பங்குபற்றிச் சுகாதாரப்பாடல்களிலே 1-ம் பரிசாக ஒரு வெள்ளிக்கிண்ணமும், சுகாதாரநடித்தல்களிலே 3-ம் பரிசாக ஒரு தகுதிப்பத்திரமும் வல்வெட்டித்துறைக் கத்தோலிக்கபாடசாலை பெற்றுக் கொண்டது. சுகாதாரநடனங்களிலே 1-ம் பரிசாக ஒரு வெள்ளிக்கிண்ணம் வதிரிதெற்குக் கத்தோலிக்கபாடசாலைக்கு வழங்கப்பட்டது. சுகாதாரநடித்தலிலே 2-ம் பரிசாக ஒருதகுதிப்பத்திரம் கலட்டிக் கத்தோலிக்கபாடசாலைக்கும், சுகாதார நடனத்திலே 3-ம் பரிசாக ஒருதகுதிப்பத்திரம் கரவெட்டிக் கத்தோலிக்கபாடசாலைக்கும் அருளப்பட்டன. வழங்கப்பட்ட மூன்று வெள்ளிக்கிண்ணங்களில் இரண்டையும், கூடிய தகுதிப் பத்திரங்களையும் கத்தோலிக்க பாடசாலைகள் பெற்றுக் கொண்டமை பாராட்டத்தக்கது.

— நிருபர்

## இளவரசரின் வத்திக்கான் தரிசனை

எலிசபேத் மகாராணியாரின் மகுடாபிஷேகவிழாவிற்குச் சமுகமளித்தபின் ஐரோப்பியநாடுகளிலே சுற்றுப்பிரயாணஞ்செய்துவருகின்ற யப்பானியதேசபட்டத்துக்குமாரனுகிய அகிஹிற்றோ இளவரசர் சமீபத்திலே வத்திக்கான் மாளிகைசென்று பரிசுத்த பாப்பரசரைச் சந்தித்தபோது, இருவரும் பத்துநிமிஷநேரம்வரையிலே பரஸ்பர மரியாதைச்செய்திகளும், உபகாரப் பொருட்களும் பரிமாறிக்கொண்டார்கள். 19 வயசுடையவரும், கடந்த முப்பதுவருடகாலத்திலும் யப்பானிய இராசகுடும்பத்தினருள் முதன்முறையாக ஐரோப்பாவைத் தரிசித்துள்ளவருமான இளவரசர் தமதுதந்தையாரான ஹிறோஹிற்றோ சக்கரவர்த்தியினிடமிருந்து வந்தனோபசார வாழ்த்துச்செய்திஒன்றையும், யப்பானிய இராசகுடும்பத்தின் வீரமுத்திரைதாங்கியனவாய் இருநூற்றுண்டுகளுக்குமுன் உருவமைத்துச் செதுக்கப்பெற்ற வெள்ளிச் சித்திரகும்பங்களையும் கொண்டுசென்று பரிசுத்தபிதாவிடம் சமர்ப்பித்தார். பாப்பரசர் அகிஹிற்றோ இளவரசருக்கு ஓர் தங்கமெடலை வழங்கினர். இச்சந்திப்புமுடிந்ததும் வத்திக்கான் இராச்சிய மந்திரியாரான மொன்சிஞ்ஞோர் மொன்ரினி ஆண்டவர் பாப்பரசர்வழங்கிய மெடலுடன் வத்திக்கான்இராசசிய நாணயங்களையும், தபால்முத்திரைகளையும் வகைவகையாக இளவரசருக்கு வெகுமதி பண்ணினர்.



# சிலோன்

இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்

இலங்கையரின் முதலாவது
இன்ஷுரன்ஸ் கம்பெனி
முதன்மையாகவே இன்னும் விளங்குகிறது.

* * *

ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி
செய்யக்கூடிய போலிஸி!
ஒவ்வொருவரின் தேவைக்கும் தகுந்ததான
போலிஸி!



தலைமை ஆபீஸ் : 69, ராணி வீதி, கொழும்பு
டெலிபோன் : 6241, 6242, 6243.

கிளைகள் :

காலி — அம்பலாந்தோட்டை — மட்டக்களப்பு
கண்டி — யாழ்ப்பாணம் — சிலாபம்
களுத்துறை — நீர்கொழும்பு — நுரேலியா
மாத்தறை — பதுளை — ரத்னபுரி — குருணகலை

மொத்த மூலதனம் 75 லட்சம் ரூபா

### தி சிலோன் இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிட்.

கீழ்க்கண்ட இன்ஷுரன்கள் இயற்றப்படும் :
ஆயுள், தீ, மோட்டார், பொதுநஷ்டஈடு,
கப்பல்சேதம் முதலியன
சேவையின்மூலம் பாதுகாப்பளிப்பது.


— ஒரேஆசனத்தை உடையதாய், ஒற்றைஎஞ்சின்பூட்டிய ஆகாயவிமானத்திலே கொண்டு செல்லத்தக்க அத்தணைசிறிய அணுக்குண்டைத் தற்போது அமெரிக்கவரசு கொண்டிருப்பதாக டாக்ளஸ்ஆகாயவிமானக் கம்பெனியின் பிரதமஎஞ்சினியரான திரு. எட்வாட் ஹெயின்மன் அவர்கள் சென்ற 11-ந் திகதி சான்பிரான்சீஸ்கோ நகரில் நிகழ்ந்த வர்த்தகசங்கவிருந்தின்போது தெரிவித்திருக்கின்றார்.

* * *

—அமெரிக்கவரசின் பரஸ்பர பாதுகாப்புத் தலைவரான திரு. ஹறல்ட் ஸ்ராசென் அவர்கள் வாஷிங்ரன் நகரிலே செனற்சபையில் பேசியபோது, ருஷியாவின் அச்சுறுத்துதல் இன்னும் பத்துவருடகாலம் நீடித்திருக்குமென்றும், அதனுல் அமெரிக்கவரசு தனது நேசநாடுகள் சிலவற்றிற்காவது அதுவரையிலே இராணுவ உதவி அளிக்க வேண்டுமென்றும் தெரிவித்திருக்கின்றார்.

* * *

— ஐதிராபாத்திலே நடைபெற்ற 16 நகராசபைத் தேர்தல்களில் 15 நகராசபைகளின் எல்லாஸ்தானங்களுக்கும் காங்கிரஸ்அபேட்சகர்கள் போட்டியின்றித் தெரியப்பட்டிருக்கின்றார்கள். காங்கிரஸ்வெற்றிபெற்ற இந்த நகராசபைகளில் பத்தும் இந்தியாவிலே கம்யூனிஸ்தர்களுக்கு அதிகமான செல்வாக்கு இருந்துவந்த தெலிங்கானு பிரதேசத்தில் உள்ளன. அதனுல் இந்திய கம்யூனிஸ்த கோட்டைகளில் ஒன்று தகரலாயிற்று.

* * *

— சமீபத்திலே சம்பேதுரு-சம்பாவிலு அப்போஸ்தலர்களின் திருநாளன்று ரோமாபுரி ஆர்ச். பேதுருவானவர் மகாலயத்தில் ஞானஸ்நானம் அருளப்பெற்ற குழந்தைகளுள் ஏறக்குறைய எல்லாருக்கும் பாரம்பரியத்தை மேற்கொண்டு பீற்றர் அல்லது போல்எனும் நாமங்கள் அருளப்படலாயிற்று. சில குழந்தைகளுக்கு இரு நாமங்களும் வழங்கப்படலாயின.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 23-1953